From http://siddhabooks.com uploaded by S. Ramesh Babu

# வைத்திய சதகம்

## (96 Thattuvam, Pulse Reading, etc.)

*அருவுருவாய் அரூபவுமாய் அடங்காத பொருளாகி அடங்கலாகி*
*அருவுருவாய் அண்ட பகிரண்டத்து உள்ளுமாய் புறத்துமாய்*
*ஒருவுருவாய் உயிர்க்குயிராய் உயிரில் நிறைந்தியங்கி நிற்குமொப்பிலானே*
*கருவுருவாய் வைத்தியத்தின் சதகமிதை வழுத்தவும் நீகாப்புத்தானே.* (1)

**பொருள்** : நுண்ணிய உருவாகவும், உருவம் இல்லாமலும், பிரபஞ்சத்தில் அடங்காத பொருளாகவும், அடங்குகின்ற பொருளாகவும், இப்பூவுலகிலும், வானுலகிலும், உள்ளேயும், வெளியேயும், ஒரு உருவாகவும், உயிர்களுக்கு எல்லாம் உயிராகவும், அவ்வுயிரில் நிறைந்து இவைகளையெல்லாம் இயக்கி கொண்டிருக்கின்ற ஒப்பில்லாத இறைவனே சித்த மருத்துவத்தின் கருவான நூலாகிய வைத்திய சதகம் என்னும் இந்நூலை கூறுவதற்கு நீ காத்தருள வேண்டும்

*காப்பான சிவமுடனே சக்தி கூடி கருவான வாய்வு அங்கி தனையெழுப்பி*
*தாப்பாக அனல்கூடி விளைந்து பொங்கி சம்போக வேளையிலே சாடும் விந்து*
*நேப்பாக அறுகு நுனி பனிபோல் வீழ்ந்து நிறைந்தோங்கி உதானனங்கே காவலாகி*
*கோப்பாக தசமாத வரையில் நின்று குவலயத்தில் விழுந்தாப்போல் வீழுந்தானே.*(2)

**பொருள்** : சிவமும் சக்தியும் கூடி கருவான வாய்வு சூடை எழுப்பி அந்த அனலானது இன்னும் அதிகப்பட்டு சம்போகம் செய்யும் போது பொங்கி வெளியேறும் விந்துவானது ஒரு அறுகம் புல்லின் நுனியில் அமைந்திருக்கும் பனியின் அளவு கருப்பையில் சேர்ந்து, அதை உதான வாய்வு காவல் புரிந்து பத்து திங்கள் தாயின் கருவறையில் இருந்து இப்பூவுலகில் வந்து சேரும்.

*தானான வாயுவினால் பிறந்து ஞானம் தனை மறந்து கருமங்கள் தனக்கீடாக*
*தானான வாத பித்த சேத்துமம் மூன்றாய் தத்துவங்கள் தொன்னூற்றாறாகவுண்டாய்*
*தானாக வியாதி நாலாயிரத்து சார்பாக நானூற்றி நாற்பத்தெட்டு*
*தேனாக வளர்ந்தங்கே கருவிலுற்று செனித்த முதல் மரிக்கும் வரை தழைக்கும்பாரே.*(3)

Designed and Developed by http://varmakalparemedy.com

**பொருள்** : வாய்வினால் பிறந்து ஞானங்களை மறந்து தான் செய்த கர்மத்தின் பலனாக வாத, பித்த, சேத்துமம் என்னும் முத்தோசங்களும், 96 தத்துவங்களும், 4448 வியாதிகளும், கருவிலிருந்தே வளர்ந்து இவ்வுலகில் பிறந்தது முதல் இறக்கும் வரை அமைந்திருக்கும்.

## பஞ்சபூதம்

*பாரப்பா பூதமஞ்சு மண் நீர் தேயு பரிவாயு ஆகாசமஞ்சினாலே*
*சேரப்பா சடமாச்சு மண்ணின் கூறு செறி மயிர் தோல் எலும்பு இறைச்சி நரம்பஞ்சாகும்*
*நேரப்பா அப்புவின் கூறு உதிரம் மச்சை நீர் மூளை சுக்கிலமோடஞ்சதாகும்*
*காரப்பா தீக்கூறு பயம் ஆங்காரம் கடும் சோம்பு நித்திரை மைதுனங்கள் அஞ்சே.* (4)

**பொருள்** : பூதம் ஐந்து என்னும் மண், தண்ணீர், தீ, காற்று, ஆகாசம் இவைகளால் நமது உடம்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் மண்ணினுடைய கூறு எவைகள் எனில் மயிர், தோல், எலும்பு, தசை மற்றும் நரம்பு என்னும் 5 பொருள்கள் ஆகும். தண்ணீரினுடைய கூறு எவை எனில் இரத்தம், மச்சை, நிணநீர்கள், மூளை, சுக்கிலம் என்னும் ஐந்து பொருள்கள் ஆகும். தீயினுடைய கூறு பயம், அகங்காரம், சோம்பல், தூக்கம், பெண் போகம் எனும் ஐந்து கூறுகள் ஆகும்.

*அஞ்சான வாயுவின் கூறு இருத்தல் ஓடல் அவை நடத்தல் கிடத்தலுடன் நிற்றல் அஞ்சாம்*
*அஞ்சாகும் ஆகாசக் கூறு காமம் அதில் குரோதம் லோபம் மோகம் மதம் அஞ்சாகும்*
*பிஞ்சாறும் விழிமானே இவைகளெல்லாம் புறக்கருவி இருபத்தஞ்சென வகுத்து*
*துஞ்சாத தத்துவங்கள் தொண்ணூற்றாறும் சொல்வதுகேள் பொறியஞ்சு தானுண்டாச்சே.* (5)

**பொருள்** : வாய்வின் கூறு எவை எனில் இருத்தல், ஓடுதல், நடத்தல், படுக்குதல், நிற்குதல் என்னும் 5 கூறுகள் ஆகும். ஆகாயத்தினுடைய கூறு எவை எனில் காமம், குறோதம், லோபம், மோகம், மதம் என்னும் 5 கூறுகள் ஆகும். மேல் குறிப்பிட்ட 25 கூறுகளும் புறக் கருவி 25 என வகுத்து 96 தத்துவங்களில் பொறி 5ன் விவரத்தை கேட்பாயாக.

## இந்திரிய வகை

*உண்டான பொறியதுவே தோத்திரம் தொக்கு உறுதியுள்ள சட்சு சிங்குவை ஆக்கிராணம்*
*கண்டாயோ செவி உடம்பு நயனம் நாக்கு கந்தமுறு மூக்குமிவை தானஞ்சாகும்*
*விண்டாயோ புலனைந்து விள்ளக்கேளு விரிந்த சத்த பரிசமுடன் ரூப ரெசகெந்தம்*
*திண்டாடும் சத்தமது செவியில் கேட்கும் தேகமது சுகமறியும் பரிசமாமே.* (6)

**பொருள்** : பொறி 5 எவைகள் எனில் தோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிறாணம் ஆகும். அதாவது தோத்திரம் என்பது செவி, தொக்கு என்பது உடம்பு, சட்சு என்பது கண், சிங்குவை என்பது நாக்கு, ஆக்கிறாணம் என்பது மூக்கு என்பன ஆகும். புலன் ஐந்து எவை எனில் சத்தம், பரிசம், ரூபம், ரெசம், கந்தம். அதாவது சத்தம் என்பது செவியில் கேட்கும் செயல், பரிசம் எனபது உடம்பின் தோலில் அறியும் சுகம்.

*பரிசமுள்ள ரூபமெல்லாம் விழியில் காட்டும் பண்பான ரசமதுவே நாவில் காட்டும்*
*பிரிசமுள்ள கெந்தம் நாசியினில் காட்டும் பேசில் உயிர் கூறு கன்மேந்திரியந்தான்*
*வரிசையுடன் அஞ்சாகும் வாக்கு பாதம் வளர் பாணி பாயுருவியோடு உபத்தமஞ்சாம்*
*விரிவதற்கு வாக்குவாய் பாதம் காலாம் வியன் பாணி கையாம் பாயுருக்கண்ணாமே.* (7)

**பொருள்** : ரூபம் என்பது கண்ணில் காட்டும் செயல், ரெசம் என்பது நாவில் தெரியும் சுவை, கந்தம் என்பது நாசியில் அறியப்படும் வாசம் இவைகள் ஆகும். உயிர்க் கூறின் முக்கியமான கருவிகளாகிய கண் மேந்திரியங்கள் 5 எவை எனில் வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம். அதாவது வாக்கு என்பது வாய், பாதம் என்பது கால், பாணி என்பது கை, பாயுரு என்பது மலத்துவாரம்

*கண்ணான உபத்தமென்பதுவே லிங்கம் கருதுமிவை அஞ்சாகும் ஞானேந்திரியம்*
*தண்ணான அஞ்சாகும் வசனம் கமனம் தானமொடு விசர்க்கம் ஆனந்தமஞ்சு*
*ஒண்ணான வசனமது வார்த்தை வாய்க்கு உயிர்கூறு கமனம் நடை காலில் தானும்*
*திண்ணான தானமென்றார் கொடுக்க வாங்க செய்யும் இருகைக்கும் உயிர் கூறதாமே.* (8)

**பொருள்** : உபத்தம் என்பது குறி இவைகள் ஆகும். ஞானேந்திரியம் 5 எவைகள் எனில் வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் ஆகும். வசனம் என்பது வாய் வழியாக வார்த்தைகளைப் பேசுவது, கமனம் என்பது காலினால் நடத்தலும், தானம் என்பது கொடுக்கல் வாங்கல் செய்யும் கையின் கூறு ஆகும்.

*கூறான விசர்க்கமது அபான வாயில் கொழுகி மலம் விடுத்தல் உயிர் கூறாமென்றும்*
*வீறான ஆனந்தம் லிங்கம் தன்னில் மேவி நீர் விந்து விடும் கூறாமென்றும்*
*பேறான கரணமினி நான்கு கேளீர் பெரிய மனம் புத்தி ஆங்காரம் சித்தம்*
*வாறான மனம் நினைக்கும் புத்திவிசாரிக்கும் ஆங்காரம் கொண்டெழுப்பும் சித்தம் ஒன்றுவிக்கும்*
(9)

**பொருள்** : விசர்க்கம் என்பது அபான வாய் வழியாக மலம் வெளியேற்றுதலும், ஆனந்தம் என்பது குறி வழியாக சிறுநீர் மற்றும் விந்து வெளியேற்றும் செயல்பாடும் ஆகும். கரணம் நான்கின் பெயர் எவை எனில் மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் ஆகும். ஒரு செயலைச் செய்ய மனம் நினைக்கும், இச்செயலை செய்யலாமா என புத்தி விசாரிக்கும், அதை செய்யவோ, செய்யாமல் இருக்கவோ ஆங்காரம் கொண்டெழுப்பும் சித்தம் அதை ஒன்றுவிக்கும். அதாவது செய்து முடிக்கும்.

*ஒன்றான அறிவொன்று அதனில்கூடி உள்ளமதைக் கண்டு மகிழ்ந்திருக்கும் என்றும்*
*நன்றான தத்துவத்தில் பூதமஞ்சு நல்ல பொறியஞ்சு புலனைந்தினோடு*
*கண்டாயே ஞான இந்திரியமஞ்சு கன்மேந்திரியமஞ்சு கரணம் நான்கு*
*ஒன்றான அறிவோடே முப்பதாச்சு உத்தமனே தசவாய்வு பத்தும் கேளே.* (10)

**பொருள்** : இத்துடன் அறிவு சேர்ந்து மகிழ்ச்சியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. ஆக 96 தத்துவத்தில் பூதம் 5, பொறி 5, புலன் 5, ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, கரணம் 4, அறிவு 1 ஆக 30 ஆகும். தச வாயுக்கள் பத்து இனி நாம் அறியலாம்.

## வாய்வு பத்து

*பத்தான வாயுதான் பிறாணனோடு அபானன் பதிவான வியானனோடு உதானன் சமானன்*
*சித்தான கூர்மனுடன் நாகன் கிரிகரன் தேவதத்தனுடனே தனஞ்சயன் பத்தாகும்*
*வித்தான பிறாணன் மூலத்தைச் சேர்ந்து மேல் நோக்கி சிரசில் முட்டி விழியின் கீழாய்*
*தத்தாக நாசிவழி ஓடும் ஈராறில் திரும்பி எட்டும் உள் புகுந்து நால் வீண் போச்சே.* (11)

**பொருள்** : பத்தான வாயுக்கள் எவை எனில் பிறாணன், அபானன், வியானன், உதானன், சமானன், கூர்மன், நாகன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பன ஆகும். பிறாணன் மூலத்தில் இருந்து கிளம்பி மேல்நோக்கி வந்து தலையில் சேர்ந்து, கண்ணின் கீழ்ப்பகுதி வழியாக நாசி வழியாக வெளியேறும். இப்படி ஓடுகின்ற 12 சுவாசங்களில் எட்டு உள் ஏற்று நான்கு சுவாசம் பாழாய் போகும்.

*போச்சுதே கடிகை ஒன்றில் சுவாசம் தானும் புகழாக முந்நூற்று அறுபதாக*
*வாச்சுதே நாளொன்றுக்கு இருபத்தோராயித்தறு நூறு மூன்றிலொரு கூறு பாழாம்*
*ஆச்சுதே இருந்தாக்கால் ஈராறாகும் அம்புவியில் நடைகொண்டால் மூவாறாகும்*
*வாச்சுதே ஓட்டமதில் நாலாறாகும் வரி விழி கண் துஞ்சில் ஐயாறு வீணே.* (12)

**பொருள்** : இவ்வாறு செல்லும் சுவாசமானது ஒரு கடிகையில்(நாழிகையில்-24 நிமிடம்) 360 சுவாசமாக ஒரு நாள் 21600 சுவாசம் உள்புகுந்து மூன்றில் ஒரு கூறு பாழாகும். (அதாவது 7200 சுவாசம் பாழாகும்) எப்படி எனில் நாம் இருக்கும் போது 12 சுவாசமும், நடக்கும் போது 18 சுவாசமும், ஓடும் போது 24 சுவாசமும், தூங்கும் போது 30 சுவாசமும்,

*வீணப்பா பெண்போகத்தால் ஆறாறாகும் விற்தாவில் போமதனால் நோயுண்டாகும்*
*தோணப்பா அபானன் உந்தி கீழே நின்று சுகமாக மலசலத்தை கழித்து நிற்பான்*
*காணப்பா வியானன் பொருத்திடங்களெல்லாம் களைப்புடனே தவனமுண்டாக்கி நிற்பான்*
*ஊணப்பா உதானன் உண்ட அசனம் தன்னை உறு நரம்பிலூட்டி உடல் வளர்க்கும் தானே.* (13)

**பொருள்** : பெண்ணுடன் உடலுறவில் ஏற்படும் போது 36 சுவாசமும், கழிந்து போவதால் மனிதர்களுக்கு நோய் உருவாகிறது. அபான வாய்வு வயிற்றின் அடிப்பகுதியில் இருந்து மலம், சிறுநீர் போன்றவைகளை வெளியேற்றுவதற்கு காரணமாக இருக்கும். வியானன் நம் உடம்பில் உள்ள பொருத்துகளில் இருந்து கொண்டு உடலுக்கு களைப்பு, வலி இவைகளைக் கொடுக்கும். உதான வாயு நாம் உட்கொள்ளும் உணவுப் பொருட்களிலுள்ள தேவையான சத்துப் பொருட்களை பிரித்தெடுத்து நரம்புகளில் ஊட்டி உடலை வளரச் செய்யும்.

*வளர்க்குமந்த சமான வாய்வு அதற்குதானே வழிகாட்டி மிஞ்ச ஒட்டாதிருப்பன் கூர்மன்*
*விழிக்குள் நின்று ஒளிவாக்கி மயக்கமாக்கி மிரட்டி முழித்திடும் நாகன் தொண்டைக்குள் நின்று*
*குளிக்கின்ற கபத்தோடு சேர்ந்து நெட்டி கொட்டாவி விக்கலெனும் கொடுமை செய்வன்*
*பளிக்குள் வரும் கிரிகரனும் முடக்கல் நீட்டல் பாங்கான அசைவுதனில் நிற்பன் தானே.* (14)

**பொருள்** : சமான வாய்வு எந்த சத்துப் பொருட்களையும் மிகாமலும், குறையாமலும் சமநிலைப்படுத்தி பார்த்துக் கொள்ளும். கூர்மன் கண்ணில் நின்று ஒளியையும், மயக்கத்தையும், கண்மூடித்திறக்கும் செயலையும் செய்ய காரணமாக இருக்கும். நாகன்

தொண்டைக்குழியில் நின்று கொண்டு கபம் வெளியாக்குதல், நெட்டி வாங்குதல், கொட்டாவி, விக்கல் போன்ற செயல்களைச் செய்ய காரணமாக இருக்கும். கிரிகரன் வாய்வு கை, கால்களை நீட்ட, மடக்க உதவி செய்து அந்தந்த அசைவுகளில் அமைந்திருக்கும்.

## நாடி பத்து

*நிற்பானே தேவதத்தன் சத்தத்தோடே நின்று குரலோசை செய்து பிலன்கள் செய்வான்*
*மொய்ப்பான தனஞ்சயனும் தேகம் மாண்டு மூன்றாம் நாள் சிரம் வெடிக்கில் ஓடிப்போவான்*
*இப்பார் கேள் நாடி பத்து இடையொடு பின்கலையும் இதமான சுழிமுனையும் சிங்குவை புருடன்*
*தப்பாத காந்தாரி அத்தி அலம்புடையும் சங்குனியோடே குகுவன் இவை பத்தாம் காணே.* (15)

**பொருள்** : தேவதத்தன் வாய்வு சத்தத்தை இனிய குரலாகவும், உடலுக்கு வலுவையும் கொடுக்க காரணமாக இருக்கும். தனஞ்சயன் வாய்வு இறந்த மூன்றாவது நாள் தலையில் உச்சி வழியாக வெளியேறும். (இந்த வாய்வு நம் உடலில் இருப்பதால் தான் மனிதர்கள் இறந்து போன பின்னர் மூன்று நாட்களுக்குள் உடல் வீங்குகிறது) பத்து நாடிகள் எவை எனில் இடகலை, பின்கலை, சுழிமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்குனி, குகுவன் (குரு) என்பன ஆகும்.

*ஆங்காணும் இடை வலக்கால் பெருவிரலில் நின்று அசைந்திளகி இட நாசியளவு பற்றும்*
*பாங்கான பின்கலை தான் இடதுகாலில் பெருவிரலில் நின்றிளகி வல நாசி பற்றும்*
*தீங்கான சுழிமுனையும் பிறாண வாயுவை சார்ந்து சிரசளவு முட்டி திடம் செய்வானங்கே*
*ஓங்காணும் சிங்குவை உண்ணாக்கில் நின்று உண்ட அன்னம் சாரமுற விழுங்குந்தானே.* (16)

**பொருள்** : இடகலை நாடியானது வலதுகால் பெருவிரலில் இருந்து புறப்பட்டு இடது நாசியைப் பற்றும். பின் கலை நாடியானது இடது கால் பெருவிரலில் இருந்து புறப்பட்டு வலது நாசியைப் பற்றும். சுழிமுனை நாடியானது பிறாண வாயுவை சேர்ந்து மூலாதாரத்தில் இருந்து துவங்கி சிரசை அடையும். சிங்குவை நாடியானது உண்ணாக்கில் நின்று கொண்டு நாம் உட்கொள்ளும் உணவுப் பொருட்களை சாரமாக்கி விழுங்கச் செய்யும்.

*தானமுள்ள புருடனுமே வலது கண்ணில் தானிருப்பன் காந்தாரி இடது கண்ணில்*
*ஈனமற அத்தி வலக்காதிருப்பன் இடக்காதில் அலம்புடைதான் இசைந்திருப்பன்*
*ஆன லிங்கத்தளவு தான் சங்குனி இருப்பன் அபானத்தில் குகுவன் தான் அடக்கமாயிருப்பன்*
*ஊனமற ஆசயங்களைந்தும் சொல்லக்கேளு ஓகோ கோ ஆமாசயமும் பக்குவாசயமே.* (17)

**பொருள்** : புருடன் நாடி வலது கண்ணில் குடி கொண்டிருக்கும். காந்தாரி நாடி இடது கண்ணில் அமைந்திருக்கும். அத்தி நாடி வலது காதில் இருக்கும். இடது காதில் அலம்புடை நாடி இருக்கும். லிங்கத்தில் சங்குனி நாடி இருக்கும். அபானத்தில் குகுவன் நாடி அடங்கியிருக்கும். ஆசயங்கள் 5 எவை எனில் ஆமாசயம், பக்குவாசயம்

## ஆசயங்கள் ஐந்து

*சயமான மலாசயமும் சலாசயத்தோடு மிகுந்த சுக்கிலவாசயத்தோடைந்து*
*பயமான ஆமாசயந்தான் அன்னம் தண்ணீர் பருகுமிடம் தன்னில் நிற்பன் பக்குவந்தான்*
*வயமான அன்னமொடு தண்ணீர்தானே வந்திறங்கும் இடத்தில் நிற்பன் மலாசயந்தான்*
*தயவான மலம் சேரும் இடத்தில் நிற்பன் சலஞ்சேருமிடம் சலாசயன் நிற்பானே.* (18)

**பொருள்** : மலாசயம், சலாசயம் மற்றும் சுக்கிலாசயம் ஆகும். நாம் சாப்பிடும் உணவுப் பொருட்கள், தண்ணீர் இவைகள் சென்றும் சேருமிடம் ஆமாசயம். இவைகள் சீரணமாகும் இடம் பக்குவாசயம் ஆகும். பக்குவமான உணவுப் பொருட்களில் மலம் சேருமிடம் மலாசயம் ஆகும். சலம் வந்து சேருமிடம் சலாசயம் ஆகும்.

## கோசம் ஐந்து

*நிற்பானே சுக்கிலவாசயந்தான் விந்து நிறைந்திருக்கும் இடத்தில் நிற்பன் கோசம் ஐந்து*
*தப்பாத அன்னமயம் பிறாணமயமென்றும் சார்வான மனோமயம் விஞ்ஞானமயம் என்றும்*
*நற்பான ஆன்நதமயமோடைந்தாம் நாடும் அன்னமயந்தன்னில் பிறாணமயம் தோன்றும்*
*ஒப்பான பிறாணத்தில் மனோமயம் தோன்றும் உண்டான மனோமயத்தில் விஞ்ஞான மயமாமே.*
(19)

**பொருள்** : விந்து நிறைந்து இருக்கும் இடம் சுக்கிலாசயம் ஆகும். கோசம் 5 எவை எனில் அன்னமயகோசம், பிறாணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞான மய கோசம், ஆனந்த மய கோசம் ஆகும். இவைகளில் அன்னமய கோசத்தில் பிறாண மயம் தோன்றும். பிறாணமய கோசத்தில் மனோமயம் தோன்றும். மனோமய கோசத்தில் விஞ்ஞான மய கோசம் தோன்றும்.

## ஆதாரம் ஆறு

*மயமான விஞ்ஞான மயத்தில் ஆனந்தம் மயந்தோன்றும் தத்துவங்கள் முப்பதாச்சு*
*செயமான முன்சொன்ன முப்பதோடே சேர்ந்ததப்பா அறுபதையும் திறமாய் பாரு*
*நயமான ஆதாரம் ஆறும் சொல்வேன் நல் மூலதாரமொடு சுவாதிஷ்டானம்*
*தயவான மணிபூரகம் அனாகதம் விசுத்தி சார்வான ஆக்கினையோடு ஆறுமாமே.* (20)

**பொருள்** : விஞ்ஞான மய கோசத்தில் ஆனந்த மயம் தோன்றும். ஆக 96 தத்துவங்களில் முதலில் குறிப்பிட்ட 30 தத்துவத்தோடு இந்த 30 தத்துவமும் சேர்ந்து அறுபதையும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 6 ஆதாரங்களும் எவை எனில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை இவை ஆறும் ஆகும்.

*ஆறான மூலமது குய்யத்துக்கும் அறிவான குதத்துக்கும் நடுவேயாச்சு*
*வீறான சுவாதிட்டந்தான் கேளு வீணாத்தண்டுற்ற இடந்தானேயாச்சு*
*வாறான நாபி எனும் கமலம் தானே மணிபூரகம் சேர்ந்த இடமேயாச்சு*
*கூறான இருதயமாம் கமலந்தானே கொழுத்த அனாகதமெனவே குறிக்கலாமே.* (21)

**பொருள்** : மூலாதாரத்தின் இருப்பிடம் எது எனில், குய்யத்துக்கும், குதத்துக்கும் நடுவிலாகும். சுவாதிட்டானம் வீணாத்தண்டுற்ற இடம் ஆகும். (அதாவது குறியினுடைய தொடக்கப் புள்ளி ஆகும். நாபி என்னும் கமலத் தானத்தில் மணிபூரம் அமைந்துள்ளது. இருதயக் கமலத்தில்(நெஞ்சுக் குழி) அனாதகம் அமைந்துள்ளது.

## மண்டலம் மூன்று

*குறிப்பான விசுத்தி கண்டத்தானமாகும் கூண்ட புருவமையம் ஆக்கினையாகும்*
*பிரிப்பான ஆதாரம் ஆறும் சொன்னோம் பேறான மண்டலந்தான் மூன்றும் கேளு*
*பொறுப்பான அக்கினி மண்டலந்தான் ஒன்று புகழான ஆதித்த மண்டலந்தான் ஒன்று*
*முறிப்பான சந்திர மண்டலத்தினோடே மூன்றாச்சு அக்கினியும் மூலத்தாச்சு.* (22)

**பொருள்** : கண்ட தானத்தில் (தொண்டைக் குழியில்) விசுத்தியும், புருவ மையத்தில் ஆக்கினையும், ஆக ஆறு ஆதாரங்களும் அமைந்துள்ளது. இனி மூன்று மண்டலங்களைப் பற்றி அறிவோமேயானால் அக்கினி மண்டலம், ஆதித்த மண்டலம், சந்திரமண்டலம் ஆகும். அக்கினி மண்டலத்தின் இருப்பிடம் மூலம்.

## மலம் மூன்று

*மூலமதில் அக்கினி மண்டலந்தான் சேர்ந்து முனிந்திளகி நாபி மட்டு முயற்சி செய்வான்*
*சீலமுறும் ஆதித்திய மண்டலந்தான் நெஞ்சில் சேர்ந்து கண்டதானம் மட்டும் திறமை செய்யும்*
*கோலமுறும் சந்திரமண்டலந்தான் நெற்றி குறிப்பறி இவை மலம் மூன்றும் கூறக்கேளு*
*சாலவே ஆணுவம் காமியமும் மாய்கை தயவான ஆணுவத்தின் தகைமை கேளே.* (23)

**பொருள்** : மூலத்தில் அமைந்திருக்கும் அக்கினி மண்டலம் சேர்ந்து இளகி நாபி வரை தன் கடமைகளைச் செய்யும். ஆதித்த மண்டலம் நெஞ்சிலிருந்து கண்டத் தானம் வரை அமர்ந்திருந்து தன் கடமைகளைச் செய்யும். சந்திர மண்டலம் நெற்றியில் இருந்து கொண்டு தன் வேலைகளைச் செய்யும். மும்மலங்கள் எவை எனில் ஆணவம், காமியம், மாய்கை இவைகள் ஆகும். ஆணவத்தின் தகமை எது எனில்

## தோசம் மூன்று

*ஆணுவந்தான் உடம்பை நானென்றிருக்கை அருங்காமியம் கண்டதெல்லாம் ஆசை கொள்ளல்*
*நீண் உடலில் மாய்கையது தனக்குவாற நிலை தானே அறியாமல் கோபம் கொள்ளல்*
*பூணுகின்ற தோசம் மூன்று அதனைக்கேளு புகழ் வாத பித்த சிலேற்பனமே மூன்றில்*
*பேணுகின்ற வாதமது வாய்வின் கோபம் பித்தமது அக்கினியின் கோபம் தானே.* (24)

**பொருள்** : உடம்பை நான் என்னும் அகம்பாவத்துடன் இருக்கச் செய்வது ஆகும். காமியம் எது எனில் கண்ட பொருட்களை எல்லாம் ஆசை கொள்ளுதல் ஆகும். மாய்கை என்பது தன் நிலை அறியாமல் கோபம் கொள்ளுதல், தோசம் மூன்று எவை எனில் வாதம், பித்தம், சிலேற்பனம் ஆகும். வாதம் எனது வாய்வின் கோபம், பித்தம் என்பது அக்கினியின் கோபம் ஆகும்.

## ஆசை மூன்று

*கோபமுள்ள சிலேற்பனந்தான் அப்பின்கோபம் குணமூன்றும் கோபமதால் கொளுநோயெல்லாம்*
*தாபமுறும் ஏடனை மூன்றதனைக்கேளாய் தார ஏடனை புத்திர ஏடனை தான் என்றும்*
*சோப உலகேடனை தான் மூன்றும் கேளு சொல்லும் தார ஏடனை பெண்ணாசையாதல்*
*தாபமுறும் புத்திர ஏடனை தான் புத்திரர் தனை தேடி ஆசைகொள்ளல் தயவு கொண்டே.* (25)

**பொருள்** : சிலேற்பனம் என்பது நீரின் கோபம் ஆகும். இம்மூன்று தோசங்களும் கோபம் கொள்ளுவதினால் நோய் உருவாகிறது. ஏடனை (ஆசை) மூன்று எவை எனில் தார ஏடனை, புத்திர ஏடனை மற்றும் உலக ஏடனை என்பன ஆகும். தார ஏடனை என்பது பெண்ணாசை, புத்திர ஏடனை என்பது புத்திரர்கள் மீது ஏற்படும் ஆசை ஆகும்.

## குணம் மூன்று

*கொண்ட உலகேடனை தான்உறவுகொள்ளில் கொள்வதற்கு ஆசைகொள்ளல் குணம்மூன்றே கேள்*
*தண்டமிழோர் அறியும் ராசத தாமதமும் சாத்வீகம் மூன்றினுட தகமை கேளாய்*
*கண்டபடி ராசதம் ஆசாரமாகி காசினியில் அமிர்த குணமாயிருப்பன்*
*உண்டி பெருத்திடும் சோம்பு தாமதம் தானும் உன்மத்த மதவெறியாய் இருப்பன் தானே.* (26)

**பொருள்** : உலகேடனை என்பது மண்ணாசை ஆகும். குணம் மூன்று எவை எனில் தமிழர்கள் அறியும் ராசத குணம், தாமத குணம், சாத்வீக குணம் என்னும் மூன்று ஆகும். ராசத குணம் என்பது எது எனில் இப்பூவுலகில் அமிர்த குணமாக இருக்கும். அதிக உணவு உட்கொள்பவனாகவும், சோம்பல் உடையவனாகவும் இருப்பான். தாமத குணம் உடையவன் வெறி உடையவனாய் இருப்பான்.

## விகாரம் எட்டு

*தானமுள்ள சாத்மீகம் குளிர்ந்த சொல்லாய் சகலருக்கும் அமிர்த குணமாய் இருக்கை*
*ஏனமுள்ள விகாரம் எட்டும் சொல்லக்கேளாய் இயல் காமம் குரோதமுடன் லோபம் மோகம்*
*ஆனமதம் ஆச்சரியம் இடும்பை வேகம் ஆக எட்டில் காமமது ஆசையாச்சு*
*ஈனமுறும் குரோதமது பிணக்கு லோபம் இயல்வான பிடிப்பாடுதானுமாச்சே.* (27)

**பொருள்** : சாத்வீக குணம் உடையவன் அமைதியான வார்த்தைகளைப் பேசி சமாதானம் கொண்டவனாக இருப்பான். விகாரம் எட்டு எவை எனில் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், ஆச்சரியம், இடும்பை, வேகம் இவைகள் ஆகும். காமம் என்பது ஆசை. குரோதம் என்பது பிணக்கு. லோபம் என்பது பிடிப்பாடு ஆகும்.

## வினை இரண்டு

*ஆமிந்த மோகமது பிரியமாச்சு அடுத்த மதமாவதுவே கருவுமாச்சு*
*ஓமிந்த ஆச்சரியம் கூரமாச்சு உறும் இடும்பை தானும் உதாசீனமாச்சு*

*வேமந்த வேகமது கொடூரமாச்சு வேறு இருவினை இரண்டும் விள்ளக்கேளு*
*தாமந்த நல்வினை தீவினை தான் இரண்டும் தயவான புண்ணியம் தான் நல்வினை தானாச்சே.*
(28)

**பொருள் :** மோகம் என்பது பிரியம். மதம் என்பது கரு. ஆச்சரியம் என்பது கூரம். இடும்பை என்பது உதாசீனம். வேகம் என்பது கொடூரம் ஆகும். வினைகள் இரண்டு வகைப்படும். எவை எனில் நல்வினை, தீவினை என்பன ஆகும். புண்ணியக் காரியங்கள் செய்வது நல்வினை

## அவஸ்தை அஞ்சு

*புண்ணியமே அல்ல தீவினையே பாவம் புனிதமுறும் அவஸ்தை அஞ்சு சொல்லக்கேளு*
*திண்ணமுறும் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி சேர்ந்த துரியம் துரியாதீதத்திேனோடு*
*வண்ணமுறும் சாக்கிரமே லாடத்தானம் வரும்பெரிய சொப்பனமே கண்டத்தானம்*
*எண்ணமுறும் சுழுத்தி இருதயமாம் தானம் இதமான துரியமது நாபி காணே.* (29)

**பொருள் :** புண்ணியம் அல்லாது பாவக் காரியங்கள் செய்வது தீவினை ஆகும். அவத்தை 5 எவைகள் எனில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் இவைகள் ஆகும். சாக்கிரத்தின் இருப்பிடம் லாடத்தானம். சொப்பனத்தின் இருப்பிடம் கண்டத்தானம், சுழுத்தியின் இருப்பிடம் இதயக் கமலம், துரியத்தின் இருப்பிடம் நாபி (தொப்புள்)

*காணப்பா மூலமதில் துரியாதீதம் கலந்து நிற்கும் அஞ்சோடே முப்பத்தாறும்*
*தோணப்பா முன்மொழிந்த அறுபதோடே சொன்னோமே தத்துவங்கள் தொண்ணூற்றாறாய்*
*ஊணப்பா உடலாச்சு உயிருமாச்சு உயிர்போனால் பிணமாச்சு உயிர் போம் முன்னே*
*பூணப்பா வாதபித்த சேத்துமத்தால் பூண்டெடுத்த தேக வளம் புகலுவேனே.* (30)

**பொருள் :** மூலாதாரத்தில் துரியாதீதம் நிற்கும், இவைகள் 36-ம், முன் சொன்ன 60-ம் சேர்த்து 96 தத்துவங்கள் ஆகும். ஆக உடலாகி, உயிராகி, இவ்வுயுர் போனால் பிணமும் ஆகும். உயிர் போவதற்கு முன்னே வாத பித்த சேத்துமத்தால் பூண்ட உடல் கூறை நாம் காணலாம்.

*தேகவளம் புகல்வது கேள் தொண்ணூற்றாறு தேர்ந்த விரல் நீளம் அவர் கையினாலே*
*வாகுபெறும் எண்ணான்கு உறுப்புமாகும் வளர் ரோமம் மூன்றும் அரைக்கோடியாகும்*
*தோகையரே சிலேசியம் தான் குணம் மூவென்பான் தூக்கு நிறை தேகமெட்டுத்துலாமேயாகும்*
*ஆகமெல்லாம் நரம்பெழுபத்திரண்டு ஆயிரமே சரியும் என அறியலாமே.* (31)

**பொருள்** : உடல் கூறை நாம் பார்த்தால் நமது உடல் அவரவர் விரல் அளவினால் 96 விரல் நீளமுடையது. நம் உடம்பில் 32 உறுப்புகள் அமைந்துள்ளது .மூன்றரை கோடி ரோமம் அமைந்துள்ளது. முக்குணத்தை உடைய மனிதனின் நிறை எட்டு துலாம் ஆகும். நரம்புகள் 72000 என அறிந்து கொள்ளவும்.

*அறிவான நாடி எழுபத்திரண்டு ஆயிரமாம் ஒருநரம்பு பரியின் கேசம்*
*நெறி நேர்மையாய் இருக்கும் இடங்கள் தோறும் நீட்டி முடக்கி யாக்கை போலே கட்டும்*
*பிறிவாக முடிச்சிடத்தில் இரண்டு கூடி பின்னல் கொண்டு பரந்து ஓங்கி தேகமெல்லாம்*
*செறிவான இருக்கும் அதில் ஒரு நரம்பில் திரிதோடம் சேரும் என்று தெளிந்து சொல்லே.* (32)

**பொருள்** : 72000 நாடி நரம்புகளில் ஒரு நரம்பு குதிரையின் முடியைப் போன்றது. அதால் உடம்பில் இருக்கும் ஒவ்வொரு பொருத்துகளையும் கட்டி வைக்கப்பட்டுள்ளது. உடம்பில் இருக்கும் முடிச்சிகளில் இவைகள் பின்னல் கொண்டு பரந்து உடம்பு எல்லாம் அமைந்திருக்கும். இவைகளில் ஒன்றில் மூன்று தோசங்களும்(வாத, பித்த, கபம்) சேரும் என கூறலாம்.

*சொல்லுகின்ற வாத பித்த சேத்துமம் தன்னில் சுகமான பித்தமது பூதநாடி*
*வெல்லுகின்ற குருநாடி ஆத்தும நாடி வெகு நோயை அகற்றி நலம் காட்டும் நாடி*
*பல்லுயிர்க்கும் தானாகி இருந்த நாடி பலகோடி அண்டமெல்லாம் நிறைந்த நாடி*
*அல்லலறும் ஆங்கார பிறாண நாடி அக்கினியை சேர்ந்தெழுந்த நாடி தானே.* (33)

**பொருள்** : வாத, பித்த, சேத்துமம் ஆகிய மூன்று நாடிகளுள் பித்த நாடியானது பூத நாடி, குருநாடி, ஆத்ம நாடி, நோய்களை அகற்றி நலம் காட்டும் நாடி, பல உயிர்களுக்கும் முக்கியமாக இருந்த நாடி, பலகோடி அண்டங்கள் எல்லாம் நிறைந்த நாடி, ஆங்கார பிறாண நாடி, அக்கினியை சார்ந்த நாடி ஆகும்.

*நாடி என்றால் நாடியல்ல நரம்பில் தானே நலமாக துடிக்கின்ற துடிதான் அல்ல*
*நாடி என்றால் வாத பித்த சிலேற்பனமும் அல்ல நாடி எழுபத்தி ஈராயிரம் தான் அல்ல*
*நாடி என்றால் அண்டபகிரண்டமெல்லாம் நாடி எழுவகை தோற்றத்துள்ளாய் நின்ற*
*நாடியது ஆராய்ந்து பார்த்தாரானால் நாடியுறும் பொருள் தெரிந்து நாடுவாரே.* (34)

**பொருள்** : நாடி என்றால் நாடி அல்ல. நரம்புகள் துடிக்கின்ற துடிப்பும் அல்ல. நாடி என்றால் வாத, பித்த, சிலேற்பனமும் அல்ல. நாடி 72000 அல்ல. நாடி என்றால் இப்பூவுலகு, விண்ணுலகு ஆகிய இடங்களில் உள்ள எழுவகை தோற்றத்திற்கும் உள்ளாகி அதனுள் நாடி ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு மட்டுமே நாடியின் பொருள் தெரியும்.

*தெளிந்திட்ட நாடியது நாளம் போலே சிறப்பாக புரிமூன்றும் ஒன்றாய்க்கூடி*
*மொழிந்திட்ட வாத பித்த சிலேற்பனமென்று முன்கையில் பூண்டிருக்கும் முறமையாக*
*நெளிந்திட்ட வாதம் அபானத்தைப் பற்றி நிறைந்திடையே சேர்ந்து உந்திக்கீழே நின்று*
*குளிந்திட்ட மூலமதோடு எழுந்து நாடி கொடி இடையை பற்றி எழும் குணத்தைப் பாரே.* (35)

**பொருள்** : நாடி என்பது நாளம் போல் மூன்று பிரியும் ஒன்றாய் கூடி வாத, பித்த, சிலேத்துமம் என்று ஒன்றாகி முன் கையில் பூண்டிருக்கும். வாத நாடி அபானத்தைப் பற்றி இடையைச் சார்ந்து தொப்புளின் கீழ்ப் பகுதி முதல் மூலம் வரை இடுப்பைப் பற்றி நிற்கும்.

*குணமான எலும்பின் மேல் தொக்கை நாடி குழாம் எடுபத்தீராயிரத்தைச் சேர்ந்து*
*நிணமான பொருத்திடமும் ரோமக்காலும் நிறைவாகி மாங்கிசமெல்லாம் பரந்து*
*மணமான விந்துவிட மலநீர் பெய்ய வழிகாட்டி தேகமெல்லாம் உளைவுகாட்டி*
*கணமான தெசவாய்வுக்கு இதமும் காட்டி கால் காட்டி வாதமெங்கும் கலக்கும் தானே.*(36)

**பொருள்** : இது எலும்பின் மீது இருக்கின்ற தோலைச் சார்ந்து 72000 நாடிகளையும் சேர்ந்து நம் உடம்பில் இருக்கின்ற ஒவ்வாரு பொருத்துகளிலும், ரோமக்காலிலும் நிறைந்து தசை முழுதும் பரந்து, விந்து வெளியேற, மலம், நீர் வெளியாக்க, உடம்பெல்லாம் உளைச்சல் உண்டாக்க தச வாயுக்களுக்கு வழிகாட்டி வாய்வு உருவத்தில் உடம்பு முழுவதும் கலந்து பின்னியிருக்கும்.

*தானான பித்தம் பின்கலையைப் பற்றி தயவான பிறாண வாய்வு அதனைச் சேர்ந்து*
*ஊனான நீர்ப்பையில் அணுகி மூலத்து எழுந்து அக்கினியை உறவு செய்து*
*மானே கேள் இருதயத்தில் இருப்புமாகி மயலாகி நினைவாகி மறப்புமாகி*
*கோனான சிரந்தனிலே இரக்கமாகி கொண்டு நின்ற பித்த நிலை கூறினோமே.* (37)

**பொருள்** : பித்த நாடி பின் கலையைப் பற்றி பிறாண வாயுவை சேர்ந்து சிறுநீர்ப் பையை அணுகி மூலத்தில் எழுந்து சூடை எழுப்பி இருதயத்தில் இருந்து நினைவு, தூக்கம், மறப்பு இச்செயல்களை செய்து தலைக்கு இரக்கமாக நிற்பது பித்தத்தின் நிலை ஆகும்.

*கூறினோம் சிலேற்பனமது சமானவாய்வை குழுமியே சுழிமுயையைப் பற்றி*
*சீறியே சிரசில் ஆக்கினையைச் சேர்ந்து சிங்நுவை உண்ணாக்கு நிணம் மச்சை ரத்தம்*
*மீறியே நீர்கோழை நரம்பெலும்பில் மேவியதோர் மூளை பெருங்குடலில் கண்ணில்*
*தேறியதோர் பொருத்திடங்கள் எல்லாம் சேர்ந்து சிலேற்பனமது வீற்றிருக்கும் தடம் கண்டாயே.*(38)

**பொருள்** : சிலேற்பனமானது சமான வாய்வில் சேர்ந்து சுழிமுனையைப் பற்றி தலையில் ஆக்கினையில் இருந்து நாக்கு, உண்ணாக்கு, நிணநீர்கள், மச்சை, இரத்தம், நீர், கோழை, நரம்பு, மூளை, பெருங்குடல், கண் பொருத்துகள் தோறும் சேர்ந்து சிலேற்பனமானது வீற்றிருக்கும்.

## தேகக்குறிகள் - வாத தேககுறி

*கண்டாயோ வாதத்தால் எழுந்த தேகம் கட்டிமையாய் தடித்திருக்கும் கருமை செம்மை*
*வண்டாரும் குழலாள் மேல் அற்ப ஆசை வாய்வுமிகும் போகமுறும் மலச்சிக்கல் தான்*
*உண்டாலோ அற்ப உண்டி எரிப்போடு உண்ணும் உறுந்தாது குறைச்சல் உடம்பு உளைவு சீதம்*
*பண்டோர்கள் நூல்முறையே நடக்கல் போதம் பாங்கான அறிவு இசைத்தல் திண்ணம் தானே.* (39)

**பொருள்** : வாத உடல் கூறு உடையவர்கள் உடல் பலமாகவும், தடித்தும், கருமை மற்றும் செம்மை நிறம் கொண்டவர்களாகவும் காணப்படுவார்கள். பெண்கள் மீது குறைந்த ஆசை உடையவர்களாகவும், வாய்வு மிகுந்தவர்களாகவும், போகப் பிரியர்களாகவும், மலச்சிக்கல் உடையவர்களாகவும், மிகக் குறைந்த உணவு எரிப்பு சுவையோடு உண்பவர்களாகவும், தாது குறைந்தவர்களாகவும், உடம்பு வலி, குளிர்ச்சி உடையவர்களாகவும், முன்னோர்கள் கூறிய நூல் முறைகளின் படி நடக்க கூடியவர்களாகவும், நல்ல அறிஞர்களாகவும் இருப்பார்கள்.

## வாத சிலேத்தும தேககுறி

*திண்ணமுறும் வாதத்தில் சேத்துமம் சேர்ந்த தேககுணம் மதகரி போல் நடக்கும் காயம்*
*வண்ணமுற தூலமதாம் உயர்ந்த மேனி வார்த்தை இடிபோலாகும் யோகமுண்டாம்*
*நிண்ணயமாம் கலை ஞான அறிவும் உண்டாம் நேரிழை மேல் மிக ஆசை நிறமே செம்மை*
*உண்ணுவது புளிப்பு எரிப்பு அதிகம் வேண்டும் உயர்ந்தோருக்கு ஆசாரம் செய்வான் தானே.* (40)

**பொருள்** : வாதத்தில் சேத்துமம் சேர்ந்த உடல் கூறு எது எனில் யானையைப் போல் வலுவாக நடக்கும் குணம் உடையவர்களாகவும், மிகப்பெரிய தூலத்தை உடையவர்களாகவும், இடி முழக்கம் போன்ற வார்த்தைகளை பேசுபவர்களாகவும், போகத்தில் பிரியம் உடையவர்களாகவும், பல்வேறு கலைகளில் ஞான, அறிவு உடையவர்களாகவும், பெண்கள் மீது மிகவும் ஆசை உடையவர்களாகவும், செம்மை நிறம் உடையவர்களாகவும், புளிப்பு சுவையும், எரிப்பு சுவையும் அதிகம் கொள்பவர்களாகவும், உயர்ந்தவர்களுக்கு பணிவிடைகள் செய்பவர்களாகவும் இருப்பார்கள்.

## வாத பித்த தேககுறி

*தானமுற வாதத்தில் பித்தம் சேர்ந்தால் சரீர குறி மெலிவு நிறம் கறுப்பே ஆகும்*
*ஈனமுற பொய்யுடனே மெய்யும் சொல்லும் எரிப்புடனே துவர்ப்பு அதிகம் உண்ண வேண்டும்*
*கான மருங்குழலாள் மேல் மிகுந்த ஆசை கடிந்த மொழி முன் கோபம் கசடாம் உள்ளம்*
*ஆன உடல் நெடிதலது குறுகலாகும் அறிவு குறைந்துக்குமென அறியலாமே.* (41)

பொருள் : வாதத்தில் பித்தம் சேர்ந்த உடல் கூறு எது எனில் உடல் மெலிவாகவும் கறுப்பு நிறத்திலும் காணப்படும். பொய்யும், மெய்யும் கலந்து பேசும். எரிப்பு, துவர்ப்பு இந்த சுவைகளில் அதிக ஆசை காணும். பெண்கள் மீது மிகுந்த ஆசை காணும். கடிந்து பேசுதல், முன் கோபம், கசடான உள்ளம் உடையவர்களாக இருப்பார். உடல் ஒல்லியாக குட்டையாகவும், குறைந்த அறிவு உடையவர்களாகவும் இருப்பர்.

## பித்த தேககுறி

*அறிவான பித்தத்தால் எடுத்த தேகம் அறமெலிவு நிறம் வெள்ளை அரிவையோடு*
*பிறியாத சுகலீலை அற்ப உண்டி பெரும்புளிப்போடு உணவு கொள்ளல் பெரியோர் தம்மை*
*குறியாக உபசாரம் பண்ணல் புத்தி குழம்பி பின் தேறல் கலை ஞான போதம்*
*நெறியாக கற்றறிவு சொல்லல் வீரம் நிலைப்புமதி இளக்கமதி உறவுமாமே.* (42)

**பொருள்** : பித்தத்தால் எடுத்த உடல் கூறு எது எனில் மெலிந்த வெள்ளை நிறமுடைய உடையவர்களாக இருப்பர். மங்கையரோடு எப்போதும் சம்போகம் செய்பவர்களாகவும், மிகவும் குறைந்த அளவு உணவு, புளிப்பு சுவையோடு உட்கொள்பவர்களாகவும், பெரியவர்களை மதிப்பவர்களாகவும், புத்தி குழம்பி பின் தேறுபவர்களாகவும், நல்ல கலை ஞான அறிவு உடையவர்களாகவும், கல்விஅறிவு, வீரம் உடையவர்களாகவும், நல்ல புத்திசாலிகளாகவும், ஏராளமான உறவினர்களோடு உறவு வைத்திருப்பவர்களாகவும் இருப்பார்கள்.

## பித்த வாத தேககுறி

*உறவான பித்தத்தில் வாதம் சேர்ந்து உரத்தெழுந்த தேகம் பொது நிறமேயாகும்*
*நிறைவான குணம் கிருபை புகழ்ச்சி வீரம் நெறி நேர்மை சுகி குளிர்ச்சி யோகம் ஞானம்*
*மறைவான கவனம் நற்கந்தம் வேண்டும் வாய்ஞானம் அதிக புத்தி குயில்போல் வார்த்தை*
*துறவான உடல் வரட்சி பசி பொறாமை சூடெரிப்பதிகம் உண்ணும் சொல்லே.* (43)

**பொருள்** : பித்தத்தில் வாதம் சேர்ந்த உடல் கூறு எது எனில் பொது நிறமாக இருக்கும். நிறைந்த குணம், கருணை, புகழ், வீரம், நேர்மை, சுகவான், குளிர்ச்சி, யோகம், ஞானம் போன்றவைகள் உடையவனாகவும், நல்ல கவனத்தோடும் நடக்க கூடியவனாகவும் இருப்பான். நற்கந்தம் வேண்டுபவனாகவும், வாய் ஞானம், நல்ல புத்தி, குயில் போன்ற வார்த்தை உடையவனாகவும், வறண்ட உடல் கட்டை உடையவனாகவும், பசி, பொறாமை உடையவனாகவும், சூடு மற்றும் எரிப்பு உள்ள பொருட்களை அதிகம் உண்பவனாகவும் இருப்பான்.

## பித்த சேத்தும தேககுறி

*சொல்லுகின்ற பித்தமதில் சேத்துமம் சேர்ந்த*
*சொரூபமது செண்பகப்பூ நிறமேயாகும்*
*வல்லியர்மேல் மிக ஆசை புளிப்பு இனிப்பு உண்ணும்*
*வாக்கு நயம் குரலோசை மனத்திடமே ஆகும்*
*நல்லறிவு கற்கும் முதியோரைப் பேணும்*
*நடுநிலையே சொல்லும் அதிக யோகமுண்டாம்*
*பல்லுயிர்க்கும் தான் இரங்கி கிருபை செய்யும்*
*பாங்கான தருமம் மிகுந்திருக்கும் தானே.* (44)

**பொருள்** : பித்தத்தில் சேத்துமம் சேர்ந்த உடல் கூறு ஏதெனில் உருவம் செண்பகப்பூ நிறத்தில் இருக்கும். பெண்களிடம் ஆசை உடையவராகவும், புளிப்பு, இனிப்பு சுவைகளை அதிகம் விரும்புவராகவும், சொல் வன்மை, இனிய குரல், திட மனது, அறிவு, கல்வி இவைகள் உடையவர்களாகவும், முதியோரை பேணுபவராகவும், நடுநிலை உடையவர்களாகவும், யோக வானாகவும், பல உயிர்களுக்கும் இரங்கி கிருபை செய்பவர்களாகவும், தர்ம சீலர்களாகவும் இருப்பர்.

## சிலேற்பன தேககுறி

*தானான சிலேற்பனத்தால் எடுத்த தேகம் தனித்திருக்கும் மனம் பிலக்கும் சரீரம் வியர்க்கும்*
*மானார் மேல் மயலாகும் சிவந்தமேனி வானிடிபோல் குரலாகும் வணக்கமாகும்*
*ஆனாலோ பொய்யதை மெய்யாயுரைக்கும் அறப்பசிக்கு தித்திப்போடு உண்ணும் கை கால்*
*ஊனாகச் சிவந்திருக்கும் காசம் காய்ச்சல் உண்டாகுமென்று முன்னோர் உரைத்தவாறே.* (45)

**பொருள்** : சிலேற்பன உடல் கூறு ஏதெனில் சாதாரணமாக இருக்கும். திட மனது உடையவனாகவும், எப்போதும் வியர்க்க கூடிய உடல் வாகு உடையவனாகவும், பெண்களிடம் அதிகம் விருப்பம் உடையவனாகவும், சிவந்த மேனியனாகவும், உரத்த குரலை உடையவனாகவும், எல்லோரை வணங்குபவனாகவும், பொய்யை மெய்யாய் உரைப்பவனாகவும், பசிக்கு இனிப்பான உணவுப் பொருட்களை உண்பவனாகவும், கை கால்கள் சிவந்த நிறமுடையவனாகவும், காசம், காய்ச்சல் போன்ற நோய்களை உடையவனாகவும் இருப்பான்.

## சிலேற்பன பித்த தேககுறி

*வாறான சிலேற்பனத்தில் பித்தம் சேர்ந்தால் வளர் கோரோசனை நிறமாம் மேனிதானும்*
*வீறான புளிப்பு இனிப்பு உண்ண வேண்டும் மெய்ரோமம் சிவப்பு வெடிக்குரலே ஆகும்*
*பேறான சத்திய மொழி பொய் சொல்லாமை பிற்பலனாலம் மோகமுண்டாம் பேதையோடு*
*கூறாக மயல் விளைக்கும் புகழ்ச்சி வீரம் கொண்டு மனத்திடத்தன் என கூறிக்கலாமே.* (46)

பொருள் : சிலேற்பனத்தில் பித்தம் சேர்ந்த உடல் கூறு எது எனில் உடல் கோரோசினையின் நிறம் உடையதாக இருக்கும். புளிப்பு, இனிப்பு, உணவுப் பொருட்களை அதிகம் விரும்பும். உடல் மற்றும் ரோமம் சிவப்பு நிறம் உடையதாகவும், உரத்த குரலை உடையவனாகவும், உண்மையை பேசுபவராகவும், பொய் சொல்லாதவராகவும், பெண்களோடு ஆசை உடையவராகவும், புகழ், வீரம் இவைகளோடு மனத்திடன் உடையவராகவும் இருப்பான்.

## சிலேற்பன வாத தேககுறி

*குறிக்கின்ற சிலேற்பனத்தில் வாதம் பற்றி கொண்டெழுந்த தேகமது தூலகாயம்*
*பிறிக்கின்ற உடல் கருமை செம்மையாகும் பெருத்த குடல் உண்டி புளிப்பு எரிப்போடு உண்ணல்*
*மறிக்கின்ற பெண்ணாசை வீரம் யோகம் வாழ்க்கை விதரண வித்தை மறைநூல் ஆய்தல்*
*நெறிகொண்ட பெரியோரை சேர்தல் அன்பு நேசமுறும் சிலேற்பனத்தில் வாதமாமே.* (47)

**பொருள்** : சிலேற்பன வாத உடல் கூறு எது எனில் பெரிய உடல் வாகு உடையவராகவும், கறுப்பு மற்றும் செம்மை நிறம் உடையவராகவும், அதிகம் உணவு உண்பவராகவும், புளிப்பு மற்றும் எரிப்பு சுவையோடு உண்பவராகவும், பெண்ணாசை, வீரம், யோகம் உடையவராகவும், பல கலைகள் அறிந்தவராகவும், மறை நூல்களை ஆராய்பவராகவும், சிறந்த மனிதர்களோடு அன்பு, நேசம் இவைகள் உடையவராகவும் இருப்பார்.

## வாத நாடி குறிகுணம்

*வாதமெனும் நாடியது தோன்றில் சீதம் மந்தமொடு வயிறுபொருமல் திரட்சை வாய்வு*
*சீதமுறும் கிறாணி மகோதரம் நீராம்பல் திகழ்வாய்வு சூலை வலி கடுப்பு தீரை*
*நீதமுறும் கிருமி குன்மம் அண்டவாதம் நிலையும் நீர் கிரிச்சனங்கள் தந்துமேகம்*
*பேதகமாம் உதரபிணி மூலரோகம் பேச வெகு பிணிகளுக்கும் பொருளதாமே.* (48)

**பொருள் :** வாத நாடி அதிகம் துடித்தால் சீதம், வயிறு மந்தம், வயிறு பொருமல், திரட்சை வாய்வு, கிறாணி, மகோதரம், நீராம்பல், வாய்வு, சூலை, வலி, கடுப்பு, தீரை, கிருமி, குன்மம், அண்ட வாதம், கிரிச்சனம், தந்தி மேகம், வயிறு வியாதி, மூல நோய் போன்ற நோய்கள் காணலாம்.

## வாதத்தில் பித்தம் சேர்ந்தால் குறிகுணம்

*பொருளான வாதத்தில் பித்தம் சேர்ந்து பொருந்தி வரும் குணங்கள் உஷ்ணவாய்வை பற்றி*
*செரியாமை புளித்தேப்பம் பொருமை நீரில் சிவப்பு மலம் பிடித்தல் உறும் தாது நட்டம்*
*கருவான தேகமதில் உளைச்சல் சோம்பல் கைகால்கள் தரிப்பு நாகசக்கும் அன்னம்*
*பரிவான ஊண் குறைதல் ருசி கேடாதல் பலநோயும் வருத்திவைக்கும் பாங்குதானே.* (49)

**பொருள் :** வாதத்தில் பித்தம் சேர்ந்தால் குணம் ஏதெனில் உஷ்ண வாய்வு, செரியாமை, புளித்த ஏப்பம், சிறுநீர் சிவப்பு நிறமாக வெளியேறுதல், மல பந்தம், தாது நஷ்டம், உடல் உளைச்சல், சோம்பல், கை கால்கள் வலி, நா கசப்பு, ஊண் குறைதல், சுவையின்மை போன்ற நோய்கள் காணலாம்.

## வாதத்தில் சேத்துமம் சேர்ந்தால் குறிகுணம்

*பாங்கான வாதத்தில் சேத்தும நாடி பரிசித்தால் திமிர் மேவும் உளைச்சலாகும்*
*தீங்கான இருமலுடன் சன்னி தோசம் சேர்ந்த விசம் வெடிசூலை இருத்துரோகம்*
*வாங்காத ஈழையும் மந்தாரகாசம் வலியுடனே பிறவீச்சு உள்வீச்சு வீக்கம்*
*ஆங்காணும் சுரமுடனே சுவாசகாசம் உண்டாகும் வெகுநோய்க்கும் உறுதி தானே.* (50)

**பொருள் :** வாதத்தில் சேத்தும நாடி சேர்ந்தால் குணம் ஏதெனில் உடல் திமிர்த்து உளைச்சல் காணும். இருமல், சன்னி, விஷம் தீண்டுதல், வெடி சூலை, இருதய நோய், ஈளை, மந்தார காசம், வலி, பிற வீச்சு, உள் வீச்சு, உடல் வீக்கம், சுரம், சுவாச காசம், போன்ற நோய்கள் காணலாம்.

## பித்த நாடி தோன்றில் குறிகுணம்

*உறுதியுள்ள பித்தமது தோன்றில் வெப்பு உஷ்ணவாய்வு அத்திசுரம் அதிசாரங்கள்*
*மறதியுடன் கிறுகிறுப்பு பைத்திய ரோகம் வளர்சோகை அழல் எரிவு காந்தல் கைப்பு*

*இருதயத்தில் கலக்கமது மறப்பு தாகம் எழும் கனவு பேயணையும் மயக்கம் மூர்ச்சை*
*சிறிது பெரும்பாடு இரத்தப்பிற மேகங்கள் சேர்ந்து வெகு பிணிபலவும் சிறக்கும்தானே.* (51)

பொருள் : பித்த நாடி தோன்றினால் குணம் ஏதெனில் வெப்பு, உஷ்ண வாய்வு, அத்தி சுரம், அதிசாரம், மறதி, தொண்டைக் கிறுகிறுப்பு, கிரிசம், சோகை, அழல், எரிவு, காந்தல், வாய் கசப்பு, இதயகலக்கம், மறதி, தாகம், கனவு, பூதாதிகளின் கோபம், மயக்கம், மூர்ச்சை, பெரும்பாடு, இரத்த பிறமேகம் போன்ற பல நோய்கள் காணலாம்.

## பித்தத்தில் வாதம் சேர்ந்தால் குறிகுணம்

*சிறப்பான பித்தத்தில் வாதநாடி சேரில் உறுந்தாது நட்டம் உதரபீடை*
*உறைப்பாக செரியாமை குன்மம் சூலை உற்றசுரம் கிறாணி வயிற்றிரைச்சல் மந்தம்*
*அறைப்பான ஓங்கார பிறநீர்க்கோவை ஆயாசம் கிறுக்கோடு மயக்கம் மூர்ச்சை*
*முறைகாய்வு விசவீக்கம் மூலவாய்வு முரடான நோய்பலவும் முடுகும் பண்பே.* (52)

**பொருள்** : பித்தத்தில் வாத நாடி சேர்ந்தால் குணம் ஏதெனில் தாது நட்டம், வயிறு சம்பந்தப்பட்ட வியாதிகள், செரியாமை, குன்மம், சூலை, சுரம், கிராணி, வயிறு இரைச்சல், வயிறு மந்தம், பிற நீர் கோவை, அசதி, கிரிசம், மயக்கம், மூர்ச்சை, முறைச்சுரம், விஷ வீக்கங்கள், மூல வாய்வு போன்ற நோய்கள் காணலாம்.

## பித்தத்தில் சேத்துமம் சேர்ந்தால் குறிகுணம்

*பண்பான பித்தத்தில் சேத்துமம் கூடி பரிசித்தால் அத்திசுரம் இழைப்பு ஈளை*
*கண்காது நாவுமுக மல நீர் மஞ்சள் கனவயிறு பொருமல் மஞ்சள் நோய் கண்ணோய்*
*உண்போது மறுத்தல் இரத்த விப்புருதி பித்தம் உளமாந்தை பீனிசமும் உரத்த வீக்கம்*
*நண்பான காமாலை சோகை வெப்பு நணுகி வந்து பல பிணியும் நாடும் தானே.* (53)

**பொருள்** : பித்தத்தில் சேத்தும நாடி சேர்ந்தால் குணம் ஏதெனில் அத்திசுரம், இளைப்பு, ஈளை, கண், காது, நா, முகம், மலம், நீர் இவைகள் மஞ்சள் நிறமாதல், வயிறு பொருமல், மஞ்சள் நோய், கண் நோய், ஊண் மறுத்தல், இரத்த விப்புருதி, பித்தம், உள மாந்தை, பீனிசம், உடல் வீக்கம், காமாலை, சோகை, வெப்பு போன்ற பல நோய்கள் காணலாம்.

## சேத்தும நாடி குறிகுணம்

*தானமுள்ள சேத்துமந்தான் இளகில் வெப்பு சயம் இருமல் ஈழை மந்தாரகாசம்*
*ஈனமுறும் சன்னி விசதோசம் விக்கல் இருத்துரோகம் கரப்பான் விரணதோசம்*
*மானனையீர் சூலை திரள் வாய்வு வீக்கம் வரும் சர்த்தி சுவாசம் நெஞ்சடைப்பு தூக்கம்*
*ஏனமுறும் காமாலை சோகைபாண்டு எழு சுரங்கள் பலதிற்கும் இடம் உண்டாமே.* (54)

**பொருள்** : சேத்தும நாடியின் குணம் ஏதெனில் வெப்பு, சயம், இருமல், ஈளை, மந்தார காசம், சன்னி, விச தோசம், விக்கல், இருதய நோய், கரப்பான், புண்கள், சூலை, திரள் வாய்வு, வீக்கம், வாந்தி, மேல் மூச்சு, நெஞ்சடைப்பு, தூக்கம், காமாலை, சோகை, பாண்டு, சுரம் போன்ற பல நோய்கள் காணலாம்.

## சேத்துமத்தில் பித்தநாடி குறிகுணம்

*இடமான சேத்துமத்தில் பித்தநாடி எழுந்தணுகில் விசமுடனே வீக்கம் உண்டாம்*
*திடமான குளிர் காய்ச்சல் மஞ்சள்நோவு தேகமதில் உளைச்சல் இழைப்பு இருமல் வாந்தி*
*விடமான நெஞ்சடைப்பு சுவாசம் விக்கல் வெகு தாகம் நா வறட்சி பாண்டு ரோகம்*
*தடமான குவளை இரத்த விப்புருதியோடு சார்ந்தணுகும் பல நோய்க்கும் தடங்கண்டாயே.* (55)

**பொருள்** : சேத்துமத்தில் பித்த நாடி சேர்ந்த குணம் ஏதெனில் விசம், உடல் வீக்கம், குளிர்சுரம், மஞ்சள் நோய், உடல் உளைச்சல், இளைப்பு, இருமல், வாந்தி, நெஞ்சடைப்பு, மேல் மூச்சு, விக்கல், தாகம், நா வறட்சை, பாண்டு, குவளை, இரத்த விப்புருதி போன்ற பல நோய்கள் காணலாம்.

## சிலேற்பனத்தில் வாதநாடி குறிகுணம்

*கண்டாயோ சிலேற்பனத்தில் வாதநாடி கலர்ந்திடுகில் வயிறுபொருமல் கனத்த வீக்கம்*
*உண்டாலோ ஓங்காளம் சர்த்தி விக்கல் உறுதிரட்சை வாய்வு வலி சன்னி தோசம்*
*விண்டாலோ இழைப்பிருமல் சோகை பாண்டு விசபாகம் விசசூலை பக்கவாதம்*
*திண்டாடும் நாசிகாபீடம் கக்கல் சிரநோய்கள் பலதும் வந்து சிறக்கும் தானே.* (56)

**பொருள்** : சிலேற்பனத்தில் வாத நாடி சேர்ந்த குணம் ஏதெனில் வயிறு பொருமல், உடல் வீக்கம், குமட்டல், வாந்தி, விக்கல், திரட்சை வாய்வு, வலி, சன்னி, இளைப்பிருமல், சோகை, பாண்டு, விச பாகம், விச சூலை, பக்கவாதம், நாசிகா பீடம், தலை நோய் போன்ற பல நோய்கள் காணலாம்.

## வாதத்தில் உஷ்ணம் சேர்ந்தால் குறிகுணம்

*சிறப்பான வாதத்தில் உஷ்ணம் தானே சேர்ந்திடுகில் அதிசாரம் உளைச்சல் வாய்வு*
*உறப்பான பொருமலோடு அக்கினி மந்தம் உண்டாகும் நீர் செறுப்பு பிரமேகங்கள்*
*புறப்பாடு பதகரி நீர் கரப்பன் ரெத்த பிரமியமும் பெரும்பாடு பிறநீர்க்கோவை*
*அறப்பான வாய்சூலை சேத்தும கோபம் ஆன பல பிணிகள் வந்தடரும் தானே.* (57)

**பொருள்** : வாதத்தில் சூடு சேர்ந்தால் அதிசாரம், உடல் வலி, வாய்வு, வயிறு பொருமல், அக்கினி மந்தம், சிறுநீர் தடை, பிறமேகம், பதகிரி, கரப்பன், இரத்த பிறமேகம், பெரும்பாடு, நீர் கோவை, வாய் சூலை, கப கோபம் போன்ற பல நோய்கள் காணலாம்.

## வாதத்தில் வாய்வு குறிகுணம்

*அடருகின்ற வாதத்தில் வாய்வு வந்து அணுகினால் வலிவீச்சு திமிர் வியாதி*
*தொடருகின்ற ஆனந்தவாய்வு பக்கசூலை தொடை குறுக்கு விலா பிடரி துடியாம் நெஞ்சில்*
*படருகின்ற நரம்பு சீப்பு இடங்கடோறும் பரந்து குத்தி கொழுத்து நெஞ்சு குத்துமாகும்*
*இடருறவே சீதமுண்டாம் கபம் பெந்திக்கும் இதனாலே பலபிணி வந்திருக்கும் பாரே.* (58)

**பொருள்** : வாதத்தில் வாய்வு சேர்ந்த குணம் ஏதெனில் வலி, பிற வீச்சு, திமிர், ஆனந்த வாய்வு, சூலை, தொடை, குறுக்கு, விலா, பிடரி இவைகள் துடிக்கும். நெஞ்சில் உள்ள நரம்புகள் குத்தி கொளுத்தி வலிக்கும். சீதம் உண்டாகும். கபம் காணும் போன்ற பல பிணிகள் வரும்.

## வாதத்தில் சீதம் சேர்ந்தால் குறிகுணம்

*இருக்குமந்த வாதத்தில் சீதம் சேர்ந்தால் இழைப்பிருமல் விசசன்னி தோசம் வீச்சு*
*மறுக்கின்ற குளிர் காய்ச்சல் விரணதோசம் வாந்தி பொருத்திடம் உளைவு மயக்கம் சோர்வு*

*ஒருக்கின்ற மலபந்தம் பொருமல் வீக்கம் உள்வீச்சு சூலையொடு பாண்டுரோகம்*
*தருக்கின்ற தனுர்வாதம் பக்கவாதம் சார்ந்து வெகுபிணி பலவும் தழைக்கும் பாரே.* (59)

**பொருள்** : வாதத்தில் சீதம் சேர்ந்தால் இளைப்பிருமல், சன்னி, பிற வீச்சு, குளிர்சுரம், புண், வாந்தி, பொருத்துகள் தோறும் உளைவு, மயக்கம், சோர்வு, மல பந்தம், வயிறு பெருமல், உடல் வீக்கம், உள் வீச்சு, சூலை, பாண்டு, தனுவாதம், பக்கவாதம் போன்ற பல நோய்கள் வரும்.

## பித்தத்தில் உஷ்ணம் கொண்டால் குறிகுணம்

*தழைப்பான பித்தத்தில் உஷ்ணம் கொண்டால் சயம் அத்திசுரம் வெதுப்பு சத்தி குன்மம்*
*கழைப்பாகி பொருத்துளைவு அதிசாரங்கள் கடுப்புடனே வயிற்றுவலி மூலவாய்வு*
*இழைப்பாகி ஊண் மறுத்தல் நாகசப்பு ஈரல்வலி கனவுடனே சங்காரதோசம்*
*வளைப்பான பைத்தியநோய் எரிவுதாகம் வந்தணுகில் பலபிணிக்கும் வகையதாமே.* (60)

**பொருள்** : பித்தத்தில் உஷ்ணம் சேர்ந்தால் சயம், அஸ்தி சுரம், உடல் சூடு, சத்தி குன்மம், பொருத்துகள் தோறும் உளைச்சல், அதிசாரம், வயிறு கடுப்பு, வயிற்று வலி, மூல வாய்வு, இளைப்பு, ஊண் மறுத்தல், நா கசப்பு, ஈரல் வலி, கனவு காணுதல், பில்லி சூனிய தோசம், கிரிகை நோய், உடல் எரிச்சல், தாகம் போன்ற பல நோய்கள் வரும்.

## பித்தத்தில் வாய்வு சேர்ந்தால் குறிகுணம்

வகையான பித்தத்தில் வாய்வு கூடி வசமானால் வலி குன்மம் சூலைவாய்வு
பகையான வாந்தி விக்கல் அருவருப்பு பைத்தியங்கள் செரியாமை புளித்த ஏப்பம்
தகையாத ஈரல்வலி நெஞ்சுநோவு தலை கிறக்கும் அசதியாம் தாதுநட்டம்
தொகை மூலவாய்வுற்றால் உஷ்ணம் சோகை தொடர்ந்து வரும் பலபிணிக்கும் தொனிப்புத்தானே.
(61)

**பொருள்** : பித்தத்தில் வாய்வு சேர்ந்தால் வலி, குன்மம், சூலை, வாய்வு, வாந்தி, விக்கல், அருவருப்பு, கிரிகை நோய், புளித்த ஏப்பம், ஈரல் வலி, நெஞ்சு வலி, தலைச்சுற்று, தாது நட்டம், மூல வாய்வு, உஷ்ணம், சோகை போன்ற பல பிணிகள் வரும்.

## பித்தத்தில் சீதம் சேர்ந்தால் குறிகுணம்

*தொனிப்பான பித்தத்தில் சீதம் கூடி தொந்தித்தால் பசிமந்தம் இரைச்சல் வாய்வு*
*இனிப்பான கபம் வாய்வு வாதகோபம் எழும் மூலகடுப்புடனே இருமல் சத்தி*
*பனிப்பான குளிர் காய்ச்சல் விசை யாரூடம் பாண்டுடனே காமாலை சோகை வீக்கம்*
*கனிப்பான நாக்கு வழுவழுப்பு தோசம் கலந்து வரும் பிணி பலவும் கதிக்கும் தானே.* (62)

**பொருள்** : பித்தத்தில் சீதம் சேர்ந்தால் பசிக்குறைவு, வயிறு இரைச்சல், வாய்வு, இனிப்பு சுவையுடன் கூடிய கபம், வாதம், மூல கடுப்பு, இருமல், வாந்தி, குளிர் காய்ச்சல், விச நோய்கள், பாண்டு, காமாலை, சோகை, வீக்கம், நாக்கு வழுவழுப்பு போன்ற நோய்களை சார்ந்து வரும் பல பிணிகள் வரும்.

## சேத்துமத்தில் உஷ்ணம் சேர்ந்தால் குறிகுணம்

*கதிப்பான சேத்துமத்தில் உஷ்ணம் கூடில் கலர்ந்த குணம் சயமிருமல் சுவாசகாசம்*
*மதிப்பான குவளை ரெத்த விப்புருதியோடு வளர் நாசிகாபீடம் இருத்துரோகம்*
*கொதிப்பான சிங்நுவையின் ரோகம் நெட்டி கொட்டாவி விக்கல் மந்தாரகாசம்*
*துதிப்பான வாய்வு அத்திக்காய்வு ரெத்தம் தோன்றும் வெகுபிணிபலதும் தொந்திப்பாமே.* (63)

**பொருள்** : சேத்துமத்தில் உஷ்ணம் சேர்ந்தால் சயம், இருமல், சுவாச காசம், குவளை, இரத்த விப்புருதி, நாசிகா பீடம், இருதய நோய்கள், நாக்கு நோய்கள், நெட்டி விடுதல், கொட்டாவி, விக்கல், மந்தார காசம், வாய்வு, அஸ்தி காய்வு, மூல இரத்தம் போன்ற பல நோய்கள் வரும்.

## சிலேற்பனத்தில் வாய்வு சேர்ந்தால் குறிகுணம்

*தொந்தித்த சிலேர்பனத்தில் வாய்வு கூடி தொடர்ந்த குன்மம் நெஞ்சடைப்பு சுவாசகாசம்*
*வந்தித்த குரல்தனிலே உறுத்தல் ஈழை வழுவழுப்பு நீரூறல் மலத்தில் சீதம்*
*வெந்தித்தல் கொழுத்தல் குத்து திமிர்வியாதி வீச்சுடனே வலிஎட்டு திரட்சை பாண்டு*
*அந்தித்த கிறுகிறுப்பு மயக்கம் விக்கல் ஆன பல பிணிகள் வந்தடையும் தானே.* (64)

**பொருள்** : சிலேற்பனத்தில் வாய்வு சேர்ந்தால் குன்மம், நெஞ்சடைப்பு, சுவாச காசம், குரல் கம்மல், ஈளை, வழுவழுப்பாய் வாய் நீர் ஊறல், மலத்துடன் கபம் வெளியேறுதல்,

உடல் கொளுத்துதல், குத்தி வலித்தல், திமிர்த்தல், பிற வீச்சு, வலி, திரட்சை, பாண்டு, கிறு கிறுப்பு, மயக்கம், விக்கல் போன்ற பல நோய்கள் வரும்.

## சேத்துமத்தில் சீதம் சேர்ந்தால் குறிகுணம்

*அடைவான சேத்துமத்தின் சீதம் பற்றி அணுகினால் சுவாசமடைப்பு இழைப்பு மூர்ச்சை*
*திடமான ஆயாசம் மயக்கம் வியர்வை சேர்ந்த விக்கல் சன்னி விசதோசம் வீச்சு*
*இடமான வயிறுபொருமல் குளிர்தல் நடுக்கல் இழைத்த சுரம் ஓங்காளம் பெருத்த வீக்கம்*
*தடமான அவகுறி வந்தணுகும் என்று சார்ந்த குருமுனிக்குரைத்த தயவுதானே.* (65)

**பொருள்** : சேத்துமத்தில் சீதம் சேர்ந்தால் மூச்சடைப்பு, இளைத்த மூச்சு, அசதி, மயக்கம், வியர்வை, விக்கல், சன்னி, விச தோசம், பிற வீச்சு, வயிறு பொருமல், உடல் குளிர்தல், நடுக்கம், இளைப்புடன் கூடிய சுரம், குமட்டல், உடல் வீக்கம் போன்ற அவ குறிகள் வரும்.

## திரிதோசம் மூன்றும் சேர்ந்தால் குறிகுணம்

*தயவான திரிதோசம் மூன்றும் கூடி தானெழுந்தால் சன்னி அவகுணமே ஆகும்*
*பயமாக மூவருமே பதுங்கினாலும் பலிபடா சன்னியது பதனம் பாரு*
*மயமான சேத்துமத்தில் பித்தம் ஆனால் வாதத்தில் சேத்துமம் வலுக்கொண்டாலும்*
*நயமாக பிணி தீர வெகுநாள் செல்லும் நாடி வகுப்புணர்ந்து குணம் அறியலாமே.* (66)

**பொருள்** : முத்தோசமும் ஒன்றாகி எழுந்த குணம் ஏதெனில் சன்னி காணும், மூவரும் பதுங்கினாலும் சன்னி காணும். சேத்துமத்தில் பித்தம் கூடினாலும், வாதத்தில் சேத்துமம் கூடினாலும் பிணி தீர வெகு நாட்கள் ஆகும்.

*அறிவான வாதத்தில் பித்தமானாலும் அடர்ந்த பித்தமதில் வாதம் அணுகினாலும்*
*செறிவாக பித்தத்தில் கபம் ஆனாலும் சேர்ந்த கபம் பித்தத்தில் சிதறினாலும்*
*பிறிவாக நோய்தீரும் கபத்தில் வாதம் பிரண்டாலும் வாதம் ஐயம் பலம் கொண்டாலும்*
*குறியாக மருந்து பலவிதம் செய்தாலும் கூண்ட உடல் விட்டு உயிர் கடக்கும் தானே.*(67)

**பொருள்** : வாதத்தில் பித்தம் சேர்ந்தாலும், பித்தத்தில் வாதம் சேர்ந்தாலும், பித்தத்தில் கபம் சேர்ந்தாலும், கபம் பித்தத்தில் சேர்ந்தாலும் நோய் தீரும். கபத்தில் வாதம்

சேர்ந்தாலும், வாதமும், ஐயமும் பலம் கொண்டாலும் எவ்வித மருந்து செய்தாலும் பலன் இல்லை. மரணம் ஏற்படும்.

*கடகமுதல் துலாம் வரையும் வாதமாகும் கன ஆடி ஐப்பசியும் அதுவே ஆகும்*
*விட மீனம் முதல் மிதுனம் பித்தம் ஆகும் விரை கமழ் பங்குனி ஆனி அதுவே ஆகும்*
*திடமான விருட்சிகம் முதல் கும்பம் சேட்டுமம் சேர்ந்த கார்த்திகை மாசியதுவேயாகும்*
*நடைமேவும் வாத பித்த சேத்துமம் தானும் நலமாக மாதம் முதல் நடக்கும் தானே.(68)*

**பொருள்** : கடகம் முதல் துலாம் வரையிலும் அதாவது ஆடி முதல் ஐப்பசி வரை வாத காலமாகும். மீனம் முதல் மிதுனம் வரை பங்குனி முதல் ஆனி வரை பித்த காலம் ஆகும். கார்த்திகை முதல் மாசி வரை சேத்தும காலமாகும். இவ்வாறு வாத பித்த கப காலங்கள் மேல் சொன்ன மாதங்களில் நடக்கும்.

*காணுகின்ற உதயத்தில் பித்தம் பத்து கடும்பகலே சேத்துமம் தான் கடிகை பத்து*
*பூணுகின்ற சாய் பொழுது வாதம் பத்து பொழுதடைந்தால் முதற் சிலேற்பனம் கடிகை பத்து*
*வேணுமந்த நடுச்சாமம் பித்தம் பத்து வெய்யவனும் உதிக்கும் முன்னே வாதம் பத்து*
*ஆணுவத்தால் வாத பித்த சேத்துமம் தானும் அறிவாக தினம் தினமும் நடக்கும் தானே.* (69)

**பொருள்** : உதயம் முதல் பத்து நாழிகை பித்த நாடியும், பகல் பத்து நாழிகை சேத்தும நாடியும், மாலையில் பத்து நாழிகை வாதமும், சூரிய உதயத்திற்கு பின்னர் சிலேற்பனம் முதல் பத்து நாழிகையும், நடுச்சாமம் பித்தம் பத்து நாழிகையும், விடியற்காலை சூரிய உதயத்திற்கு முன் பத்து நாழிகை வாதமும் நடக்கும். இவ்வாறு தினசரி வாத பித்த சேத்துமங்கள் நடக்கும் என்று அறியவும். (1 நாழிகை -24 நிமிடம்)

*தானவனும் அமைத்தபடி வயது நூறு சகலருக்கும் இளமையிலே சிலேற்பனமாகும்*
*ஆன நடுவயது பித்தம் அப்பால் வாதம் அய்யாறு மூவாண்டு மாதம் நான்கு*
*ஈனமற மூவருமே மூன்று பங்காய் இப்படியே நடந்துவரும் இறையோன் முன்னாள்*
*ஏனமுற அமைத்த வண்ணம் ஆண்டுமாதம் இயல்பான நாட்கள் தப்பி மரிப்பதாமே.* (70)

**பொருள்** : இறைவனின் அமைப்புபடி இப்பூவுலகில் பிறந்த அனைவருக்கும் நூறு வயது வாழ்க்கை. அதில் இளமையில் சிலேற்பனமும், நடுப்பருவத்தில் பித்தமும், பிறகு வாதமும் முறையே 33 ஆண்டுகள் 4 மாதம் முந்நாடிகளும் மூன்று பங்காய் இப்படி நடக்கும். இவ்வாறு இருக்க இறைவன் அமைத்தபடி ஆண்டு, மாதம் இவைகள் மாறி மரணமும் ஏற்படும்.

*மரிப்பான நூறாண்டில் சேத்தும பித்தம் வாதமிவை மூன்று பங்காய் நடக்கும் போது*
*தரிப்பான ஆண்டு பதினொன்று மாதம் தான் ஒன்று நாள் பத்து சமைத்ததாகும்*
*இருப்பான சிலேற்பனத்தில் அரைக்கால் வாதம் இயல்பான பித்தத்தில் அரைக்கல் ஐயம்*
*கதிப்பான வாதத்தில் கால் ஐயம் பித்தம் கலர்ந்து முறை முறையாய் கையாளும் பாங்கே.* (71)

பொருள் : நூறாண்டில் சேத்துமம், பித்தம், வாதம் இவைகள் மூன்று பங்காய் நடக்கும் போது பதினொன்று ஆண்டு ஒரு மாதம் பத்து நாட்கள் சிலேற்பனத்தில் அரைக்கால் வாதம், பித்தத்தில் அரைக்கால் ஐயம், வாதத்தில் கால் ஐயமும் பித்தமும் கலந்து முறையாய் நடக்கும்.

*பாங்காக இப்படியே நடக்கும் போது பழவினையால் கர்மத்தால் பலநோய் தன்னால்*
*தீங்கான பூதமஞ்சால் பிதா மாதாக்கள் செய்வினையால் சுத்திர தோசத்தால் பேயால்*
*ஆங்காணும் கருவிகளால் ஊறுபாடால் ஆனபல விசத்தாலும் நஞ்சினாலும்*
*ஓங்காணும் உயிரழிவாம் விதியோடு சேர்ந்து உறுமாதம் ஆண்டு நாள் குறையும் தானே.* (72)

**பொருள்** : இப்படியே மூன்று நாடிகளும் நடக்கும் போது பழவினையால், கர்மத்தால், பல்வேறு நோய்களால், பஞ்ச பூதத்தால், மாதா, பிதா இவர்களின் செய்வினையால், பில்லி சூனியத்தால், பேயால், ஏதேனும் ஆயுதங்களால் ஏற்படும் காயங்களினால், விச தோசத்தால், நஞ்சினால், விதியினால் உயிரழிவு ஏற்படும் போது ஆண்டு, மாதம், நாட்கள் இவைகள் குறையும்.

*குறையாத திரி போகர் நெடுநோயாளர்*
*குதிரை மதகரி ஏறி நடந்தோர் எய்தோர்*
*நிறையாக உண்டெழுந்தோர் லெகரி கொண்டோர்*
*நீர்பாடு நீரழிவு குறை நோவுற்றோர்*
*முறையாக வீக்கமுள்ளோர் அத்தி காய்வால்*
*முசிந்திளைத்தோர் பயம் உற்றோர் விசம் அணைந்தோர்*
*அறையாமல் ஓட்டமுற்றோர் கிலேசம் கொண்டோர்*
*அறப்பசித்தோர் இவர்க்கு தாதுறமாட்டாதே.*

**பொருள்** : எப்போதும் போகம் செய்பவர்கள், நெடு நோயாளர், குதிரை, யானை இவைகளில் சவாரி செய்தோர், நடை பயிற்சி செய்தவர்கள், உணவு உண்டு எழுந்தவர்கள், போதைப் பொருட்களை கொண்டவர்கள், நீரடைப்பு, நீரழிவு, குறை நோய்

உள்ளவர்கள், உடல்வீக்கம் உடையவர்கள், அத்தி காய்வால் இளைத்தவர்கள், பயப்பட்டவர்கள், விசம் தீண்டினோர்கள், ஓட்டம் உற்றவர்கள், மனக்கிலேசம் கொண்டவர்கள், பசியோடு இருப்பவர்கள் இவர்களுக்கு சரியான முறையில் நாடி காணப்படாது.

*மாட்டாத கிழமான பெண்கள் கெற்பம்*
*மாதவிடாய் ஆனோர்க்கும் பெரும்பாட்டோர்க்கும்*
*தேட்டாசை அதிக விசாரத்தினோர்க்கும்*
*தேய்த்தெண்ணெய் முழுகினோர்க்கும் சினம் கொண்டோர்க்கும்*
*வாட்டாசை கன்னியர் மேல் பராக்காய் நோக்கும்*
*வயசாக இழைத்தோர்க்கும் மதம் கொண்டோர்க்கும்*
*மோட்டாத்துமாக்களுக்கும் தாது பார்த்தால்*
*முறையாக நோய்களும் தான் வகுப்புறாதே.* (74)

**பொருள்** : வயதான பெண்கள், கற்பிணிகள், மாதவிடாய் உற்றோர்கள், பெரும்பாடு நோயாளர்கள், அதிக விகாரம் உடையவர்கள், எண்ணெய் தேய்த்து முழுகினோர்கள், கோபப்பட்டோர்கள், பெண்கள் மேல் ஆசையோடு பார்த்து கொண்டிருப்பவர்கள், அதிக வயதாகி இளைத்தவர்கள், கோபம் கொண்டவர்கள், அதிதூல உடல் உள்ளவர்கள் இவர்களுக்கு நாடி பார்த்தால் முறையாக நோய் காண இயலாது.

*வகுப்பாக கைமுறிந்தோர் சோகை கொண்டோர் மாண்ட பிணந்தனைத்தொட்டோர் வாந்தி விக்கல்*
*தொகுப்பார்களிவையெடுத்தோர் விரதமுற்றோர் சோனை மழை தனில் நனைந்தோர் சங்கீதம்*
*பகுப்பாகவே படித்தோர் களறி சுற்றிப் பலநாட்டியங்கள் மிகவாடி எய்த்தோர்*
*மிகுப்பாக சுவாசமதை யடக்கினோர்க்கும் விரைவான நாடியது விலகுந்தானே.* (75)

**பொருள்** : கை முறிந்தவர்கள், சோகை நோயாளர்கள், பிணத்தை தொட்டவர்கள், வாந்தி, விக்கல் இவைகள் எடுத்தவர்கள், விரதம் இருப்பவர்கள், பல காலம் மழை இல்லாமல் இருந்து புதிதாக மழை பெய்யும் போது நனைந்தவர்கள், சங்கீதம் படித்து விட்டு வந்தவர்கள், களரி விளையாடி விட்டு வந்தவர்கள், நாட்டியங்கள் ஆடி விட்டு வந்தவர்கள், யோகா முறைகள் செய்து சுவாசத்தை அடக்கினவர்கள் இவர்களுக்கு நாடி பார்த்தால் முறையாக நோய் கணிக்க முடியாது.

## அசாத்தியக்குறி

*தானான பிறமேகம் வாதசூலை சார்வான நீரழிவு குன்ம ரோகம்*
*ஆனாலோ சயரோகம் சன்னிதோசம் அடுத்தவிசம் காமாலை பாண்டு சோகை*
*மானே கேள் கபரோகம் ஆந்திரவியாதி மஞ்சள்நோய் குலைநோவு பைத்தியரோகம்*
*ஊனாகும் வரும் இடத்தில் அதிசாரம் கண்டால் உண்டாகும் அசாத்தியமாம் உறுதிதானே.* (76)

**பொருள்** : பிறமேகம், வாத சூலை, நீரழிவு, குன்மம், சய நோய், சன்னி, விச நோய்கள், காமாலை, பாண்டு, சோகை, கப நோய்கள், ஆந்திர நோய்கள், மஞ்சள் நோய், இதய நோய், கிரிச நோய் போன்ற நோய்கள் உடையவர்களுக்கு அதிசார நோய் வந்தால் அசாத்தியம் ஆகும்.

*உறுதிகொண்ட வலுவீச்சு சன்னிதோசம் உரத்த சுரம் விசசோகை உள்ளுரோகம்*
*மறுதியுள்ள கிராணி அதிசாரம் குன்மம் அத்திசுரம் வயிறுளைவு பிறமேகங்கள்*
*பொறுதியுள்ள நீரிழிவு சுவாசகாசம் பொருந்தும் சயங்கள் இளைப்பும் இருத்துரோகம்*
*சுறுதியுடனே அங்கே வீக்கம் வந்து தோன்றிடுகில் மரணமென்று தொகுத்துச் சொல்லே.* (77)

**பொருள்** : பிறவீச்சு, சன்னி, சுரம், சோகை, உள்உறுப்பு வியாதிகள், கிறாணி, அதிசாரம், குன்மம், அத்திச் சுரம், வயிற்று வலி, பிற மேகம், நீரழிவு, சுவாச காசம், சயம், இளைப்பு, இருதய நோய்கள் போன்ற நோய் உடையவர்களுக்கு உடல் வீக்கம் வந்தால் மரணம் அடைய வாய்ப்புகள் உண்டு.

*தொகுத்திட்ட நீரழிவு மேகசூலை சுரவீக்கம் சன்னிவலி தோசம் மாந்தம்*
*மிகுத்திட்ட கிராணி அதிசாரம் வாதம் விசபாகம் திரள்பாண்டு சோகை காமாலை*
*வகுத்திட்ட பெரும்பாடு மஞ்சள்நோவு வாய்வு ரெத்தபித்தமுடன் பலநோவுக்கும்*
*பகுத்திட்ட இளைப்புடனே சுவாசம் விக்கல் பற்றினால் மரணமென்று பகுத்துச் சொல்லே.* (78)

**பொருள்** : நீரழிவு, மேக சூலை, சுரம், வீக்கம், சன்னி, வலி, மாந்தம், கிறாணி, அதிசாரம், வாதம், விச பாகம், பாண்டு, சோகை, காமாலை, பெரும்பாடு, மஞ்சள் நோய், வாய்வு, இரத்த பித்தம் போன்ற நோய்கள் உடையவர்களுக்கு இளைப்பு, மேல் சுவாசம், விக்கல் இவைகள் வந்தால் மரணம் வரும்.

*சொல்லுகின்ற வீக்கம் சோகை சூலை வயிறளச்சல் வாதம் நீரழிவு மேகம்*
*அல்லல் படும் இளைப்பிருமல் சுவாசகாசம் அதிக சயம் சன்னி விசமாந்த தோசம்*
*வெல்லுகின்ற கபரோகம் திரள் வியாதி வீறான குன்மம் அத்தி சுரம் காமாலை*
*வல்லமையாய் இந்நோயில் வயிறுளைச்சல் வந்தணுகில் மரணமென்று வசனிப்பாயே.* (79)

**பொருள்** : வீக்கம், சோகை, சூலை, வயிறளைச்சல், வாதம், நீரழிவு, மேகம், இளைப்பிருமல், சுவாச காசம், சயம், சன்னி, விச மாந்தம், கப நோய், நெஞ்சு நோய், குன்மம், அத்திச் சுரம், காமாலை. இந்நோயாளருக்கு வயிற்று போக்கு வந்தால் மரணம் வரும்.

*வசமான நீரழிவில் பிளவை ஈளை மந்தாரகாசம் சயம் ரெத்தபித்தம்*
*நிசமான உளைச்சலதிசாரம் சன்னி நீண்ட சுரதோசம் ரெத்தபிறமேகங்கள்*
*விசமான வீக்க நீர் கெற்பசூலை வீச்சுவலி பெரும்பாடு மூலவாய்வு*
*துசமான இந்நோயில் கொழுத்தவாய்வு தோன்றிடுகில் மரணமென்று துதிக்கலாமே.* (80)

**பொருள்** : நீரழிவு நோயாளருக்கு பிளவை, ஈளை, மந்தார காசம், சயம், இரத்த பித்தம், வயிறு உளைச்சல், அதிசாரம், சன்னி, தொடர்ந்து சுரம், இரத்த பிறமேகம், வீக்கம், கற்ப சூலை, பிற வீச்சு, வலி, பெரும்பாடு, மூல வாய்வு, வாய்வு வந்தால் மரணம் வரும்.

*துதிப்பான மேகத்தில் நீரழியும் ஆகா*
*தோன்றிய நீரழிவு தன்னில் வாய்வும் ஆகா*
*மதிப்பான வாதத்தில் வயிற்றுளைச்சல் ஆகா வரும்*
*உளைச்சல் தன்னில் வாய்வும் கொளுத்தும் ஆகா*
*கொதிப்பான வாய்வதிலே விக்கல் ஆகா*
*கூண்ட விக்கல் தனில் இளைப்பு கொளுத்தல் ஆகா*
*கதிப்பான இளைப்பதிலே சுவாசம் வந்து*
*கலந்தாலும் மரணமென்று கருதலாமே.* (81)

பொருள் : மேக நோயாளருக்கு நீரழிவு நோய் ஆகாது. நீரழிவு நோயாளருக்கு வாய்வு ஆகாது. வாத நோயாளருக்கு வயிற்றுளைச்சல் ஆகாது. வயிற்றுளைச்சல் நோயாளருக்கு வாய்வு, கொளுத்து ஆகாது. வாய்வு நோயாளருக்கு விக்கல் ஆகாது. விக்கல் நோயாளருக்கு இளைப்பு மற்றும் கொளுத்து ஆகாது, இளைப்பு நோயாளருக்கு சுவாசம் தடை வந்தால் மரணம் என்று கருதலாம்.

*கருதுகின்ற மந்தமதில் சுரமும் ஆகா கலந்த சுரம் தன்னில் விசமே காணலாகா*
*மருவுகின்ற விசமதிலே வீக்கம் ஆகா வரும் வீக்கம் தன்னில் வயிறு பெருமல் ஆகா*
*பெருமலிலே கபரோகம் புரளலாகா பொருந்து கபம் தனில் இளைப்பு பூணலாகா*
*வெருவியதோர் இளைப்பதிலே சுவாசம் விக்கல் மேவிடுகில் மரணமென்று விள்ளலாமே.* (82)

**பொருள்** : வயிறு மந்தமாக இருக்கும் போது சுரம் ஆகாது. சுர நோயாளருக்கு விச நோய் ஆகாது. விச நோயாளருக்கு வீக்கம் ஆகாது. வீக்கம் நோயாளருக்கு வயிறு பொருமல் ஆகாது. வயிறு பொருமல் நோயாளருக்கு கப நோய் ஆகாது. கப நோயாளருக்கு இளைப்பு ஆகாது. இளைப்பு நோயாளருக்கு மேல் சுவாசம், விக்கல் இவைகள் வருமானால் மரணம் என்று கருதலாம்.

*விள்ளுகின்ற மேகமதில் வாய்வுமாகா விரைவான வாய்வதிலே திரட்சையாகா*
*கொள்ளுகின்ற திரட்சையதில் வீக்கமாகா கூறியதோர் வீக்கமதில் சயமுமாகா*
*தள்ளுகின்ற சயமதிலே கபமுமாகா தோன்றும் கபம் தனில் ரெத்தம் தோன்றலாகா*
*தள்ளுகின்ற ரெத்தமதில் சுவாசம் விக்கல் சார்ந்தாலும் மரணமென்று சாற்றலாமே.* (83)

**பொருள்** : மேக நோயாளருக்கு வாய்வு ஆகாது. வாய்வு நோயாளருக்கு திரட்சை ஆகாது. திரட்சை நோயாளருக்கு வீக்கம் ஆகாது. வீக்க நோயாளருக்கு சயம் ஆகாது. சய நோயாளருக்கு கபம் தோன்றக் கூடாது. கபத்தில் இரத்தம் வரக் கூடாது. இரத்தம் வரும் நோயாளருக்கு சுவாச முட்டு, விக்கல் வந்தால் மரணம் என்று கூறலாம்.

*சாற்றுவது நீரழிவில் பிளவையாகா சலமான பிளவையிலே தாகமாகா*
*தேற்றமுள்ள தாகமதில் அனலுமாகா இயல்பான அனல்தனிலே மயக்கமாகா*
*சீற்றமுறு மயக்கமதில் வியர்வையாகா சீர்கேடாம் வியர்வையதிலே கபமுமாகா*
*பூற்றிருவே கபம் தனிலே விக்கல் வந்து பொருந்திடுலோ மரணமென்று புகலலாமே.*(84)

**பொருள்** : நீரழிவு நோயாளருக்கு பிளவை ஆகாது. அவ்வாறு பிளவை உள்ளவர்களுக்கு தாகம் ஆகாது. தாகம் உள்ளவர்களுக்கு சூடு ஆகாது. அப்படி சூட்டில் மயக்கம் ஆகாது. மயக்கத்தில் வியர்வை ஆகாது. வியர்வையதில் கபம் ஆகாது. கபத்தில் விக்கல் வந்து அதிகப்பட்டால் மரணம் என்று கூறலாம்.

*புகல்வது கேள் அத்தி வாய்வு ஆகா பொருந்தியதோர் வாய்வதிலே குன்மமாகா*
*தகமைபெறும் குன்மமதில் பேதியாகா தாங்காத பேதியிலே பொருமலாகா*
*அகலமுறும் பொருமலிலே கபமுமாகா ஆங்கார கபத்தில் விக்கல் அணுகலாகா*
*சுகம் பெறவே விக்கலிலே மயக்கம் வந்து தோன்றிடில் மரணம் வந்து தொடரும் தானே.* (85)

**பொருள்** : அஸ்தி வாய்வு நோய் ஆகாது. அஸ்தி வாய்வில் குன்மம் ஆகாது. குன்மத்தில் பேதி ஆகாது. பேதியிலே பொருமல் ஆகாது. பொருமலிலே கபம் ஆகாது. கபத்தில் விக்கல் ஆகாது. விக்கலில் மயக்கம் வந்தால் மரணம் வரும் என்று அறியலாம்.

*தொடரான பித்தமதில் சோகையாகா சோகையிலே வாய்வெழுந்து தொந்திப்பாகா*
*இடரான வாய்வதிலே பாண்டுவாகா எழில் பாண்டுதன்னில் வயற்று கடுப்புமாகா*
*திடமான கடுப்பதிலே சீதமாகா சீதமதில் எழுந்து கபம் சேரலாகா*
*தடமான கபம் தனிலே மயக்கம் விக்கல் தரித்திடிலோ மரணமென்று தயவாய்ச் சொல்லே.* (86)

**பொருள்** : பித்த நோயாளருக்கு சோகை ஆகாது. சோகையில் வாய்வு எழுந்து சேரக் கூடாது. அந்த வாய்வில் பாண்டு ஆகாது. பாண்டில் வயிறு கடுப்பு ஆகாது, வயிறு கடுப்பில் சீதம் ஆகாது. சீதத்தோடு கபம் சேரக் கூடாது. கபத்துடன் மயக்கம், விக்கல் இவைகள் வந்தால் மரணம் என்று கூறலாம்.

*தயவான சுரம்தனிலே விசமுமாகா சார்ந்த விசம்தன்னில் தோசம் தழைக்கலாகா*
*பயமான தோசமதில் சன்னியாகா பாங்கான சன்னியிலே கபமுமாகா*
*இயல்பான கபம்தனிலே விக்கலாகா விளங்கியதோர் வாய்வதிலே இளைப்புமாகா*
*கயமான இளைப்பதிலே சுவாசம் விக்கல் கலந்தாலும் மரணமென்று கழறலாமே.* (87)

**பொருள்** : சுர நோயாளருக்கு விசம் ஆகாது. விசம் தன்னில் தோசம் (ஒவ்வாமை) வரக் கூடாது. அத்தோசத்தில் சன்னி ஆகாது. சன்னியில் கபம் ஆகாது. கபத்தில் விக்கல் ஆகாது. விக்கலில் வாய்வும், இளைப்பும் ஆகாது, இளைப்பில் மூச்சு முட்டு வரக் கூடாது. மூச்சு முட்டும், விக்கலும் கலந்தால் மரணம் என்று அறியலாம்.

*களறியதோர் அத்தியிலே காய்வுமாகா காய்வதிலே வாய்வு எழுந்து கலக்கலாகா*
*உளறியதோர் வாய்வதிலே உளைச்சலாகா உண்டான உளைச்சலிலே வீக்கமாகா*
*கிளறியதோர் வீக்கமதில் சீதமாகா குளிர் சீதமதனில் கபம் இளகலாகா*
*இளகியதோர் கபம் தனிலே மயக்கம் வீக்கம் எழுந்தாலும் மரணமென்று இசைக்கலாமே.* (88)

**பொருள்** : எலும்பு காயக் கூடாது. அப்படி காய்ந்தால் அதில் வாய்வு கலக்க கூடாது, வாய்வில் உடம்பு உளைச்சல் ஆகாது. உடம்பு உளைச்சலில் வீக்கம் ஆகாது. வீக்கத்தில் சீதம், குளிர் ஆகாது, சீதத்தில் கபம் இளகக் கூடாது. கபத்தில் மயக்கம் மற்றும் வீக்கம் வந்தால் மரணம் என்ற அறியலாம்.

*இசைந்தபடி சுரம்தனிலே இளைப்புமாகா இளைப்பான கபந்தனிலே விசமுமாகா*
*உசைந்த விசந்தனிலே மயக்கம் வாய்வும் ஆகா உண்டான மயக்கத்தில் சுவாசமாகா*
*அசைந்திளகும் சுவாசமதில் வியர்வையாகா ஆன கபவியர்வையிலே குளிர்ச்சியாகா*
*வசைந்திளகும் குளிர்ச்சியிலே மயக்கம் விக்கல் வந்தாலும் மரணமென்று வணங்கலாமே.* (89)

**பொருள்** : சுரத்தில் இளைப்பு ஆகாது. இளைப்பான கபத்தில் விசம் ஆகாது. விசத்தில் மயக்கம், வாய்வு ஆகாது. மயக்கத்தில் சுவாச முட்டு ஆகாது, சுவாசத்தில் வியர்வை ஆகாது. கப வியர்வையில் குளிர்ச்சி ஆகாது. குளிர்ச்சியில் மயக்கம், விக்கல் இவைகள் வந்தால் மரணம் என்று அறியலாம்.

*வணங்கியதோர் வாத பித்த சிலேற்பம் தன்னில் வலுவான பித்தமது தளர்ச்சியாகும்*
*பிணங்கியதோர் வாதமதில் சிலேற்பம் சேர்ந்து பின்னல்கொண்டு இளைப்பாகி உடல் வெளுத்து*
*இணங்கியதோர் கைகாலும் குளிர்ந்து நெஞ்சம் எடுத்தெடுத்து கண் மூக்கில் நீரும் பாய்ந்து*
*உணங்கிய நாவறண்டு பல் கறுத்து வாந்தி உண்டாகில் மரணமென்று உரைக்கலாமே.* (90)

**பொருள்** : வாத பித்த சிலேற்பன நாடி இவைகளில் பித்தம் தளர்ந்து வாதத்தில் சிலேற்பனம் சேர்ந்து பின்னல் கொண்டு உடல் இளைத்து விளறி, கையும் காலும் குளிர்ந்து, நெஞ்சு படபடத்து, கண், மூக்கு இவைகளில் நீரொலித்து நா வறண்டு, பல் கறுத்து வாந்தி உண்டானால் மரணம் என்ற கூறலாம்.

*உரையான பித்தமொடு வாதம் தாழ்ந்து உற்ற சிலேற்பனம் இளகி சர்த்தி விக்கல்*
*விரைவாகவே எடுத்து நெஞ்சடைத்து மேலிளைப்பாய் குருகுருத்து வியர்வையாகி*
*வரையாக விழி சொருகி மூக்கடைத்து வாயாலே சுவாசமும் நாவறண்டுதானால்*
*துரையாக இருந்தாலும் மரணம் வந்து சுறுக்காக மரிப்பதுவும் திண்ணம் தானே.* (91)

**பொருள்** : பித்தம் மற்றும் வாத நாடிகள் தாழ்ந்து சிலேற்பன நாடி இளகி நின்றால் வாந்தி, விக்கல், நெஞ்சடைப்பு, மேல் மூச்சு, முத்து போல் வியர்வை, விளி சொருகி, மூக்கடைத்து வாய் வழியாக சுவாசம் வெளியேறி, நா வறண்டுதானால் மரணம் நிச்சயமாக உண்டாகும்.

*திண்ணமுடன் நீரடைத்து மலமும் சிக்கி சிறந்ததொரு நீர் பாய்ந்து சீதம் மேவி*
*வண்ணமுடன் கைகாலும் பருத்து வீங்கி வயிறு பொருமி நாவறண்டு வாந்தியாகி*
*எண்ணமுற மூச்சடைத்து விக்கலாகி இளைப்பதிலே மயக்கமதாய் தேகமெல்லாம்*
*தண்ணெனவே குளிர் தோன்றில் மரணம் வந்து சாருவதும் உறுதியென்று சமைந்து சொல்லே.*(92)

**பொருள்** : சிறுநீர், மலம் போன்றவை அடைத்து உடலில் நீர்(வியர்வை) வெளியேறி உடல் குளிர்ச்சியடைந்து கையும் காலும் வீங்கி, வயிறு பொருமி, நா வறண்டு வாந்தியாகி, மூக்கடைத்து விக்கல் உண்டாகி, இளைப்பு ஏற்பட்டு மயக்கமாகி உடம்பு எங்கும் குளிர்ச்சியடைந்தால் மரணம் உறுதியாக நேரும் எனக் கூறலாம்.

*சமைந்த வண்ணம் தனையெடுக்கும் விக்கலான சடமான வயிறு பொருமி சாரம் சோர்ந்து*
*இமைத்த உடல் புடைத்தெழுந்து விலாவு ரெண்டும் எடுத்தடித்து உடல் குளிர்ந்து சக்தியாகும்*
*இமைத்த உடல் வெளுத்து புறம் கைகால் வீங்கி ஈண்ட லிங்கமும் சுருங்கி யிளைப்புமாகி*
*அமைந்த குலை வியர்வையினால் மரணம் வந்து ஆன உடல் அழியுமென அறியச் சொல்லே.*(93)

**பொருள்** : விக்கல் வந்து, வயிறு பொருமி, நீர் கோர்த்து, உடல் புடைத்து வீக்கமாகி, இரண்டு விலா பக்கமும் துடித்து உடல் குளிர்ந்து, உடல் வலுவாகி, உடல் விளறி, புறம்கை, புறம்கால் இவைகள் வீங்கி, லிங்கம் சுருங்கி, மேல் மூச்சு வந்து, அதிகப்படியான வியர்வை காணுமானால் மரணம் வரும்.

*அறிவான கண்டமதில் நோவுமாகி அம்பரமே சிவந்து அழல் தானே மேவி*
*குறியான அண்டமுடன் முகமும் வீங்கி குறுக்கு அடிவயிறு புறம் கைகால் கனத்து*
*வெறியான தாகமுமாய் மயக்கமாகி விக்கலுடன் மேல்மூச்சாய் வியர்வையாகி*
*மறிவான நயனமது கூசிப்பார்க்கில் மரணம் வருமென்று திடன் வகுக்கலாமே.* (94)

**பொருள்** : கண்டத்தில்(கழுத்து) வலி வந்து, உச்சி சிவந்து சூடு தாவி, அண்டம், முகம் வீங்கி, முதுகு, அடிவயிறு, புறம் கை, புறம் கால் இவைகள் கனத்து வீங்கி, தாகம் ஏற்பட்டு, மயக்கம் வந்து, விக்கல், மேல் மூச்சு, வியர்வை, கண் கூசுதல் போன்ற குறி குணங்கள் இருந்தால் மரணம் வரும்.

*வகுப்பான நீர் மலமும் அடைத்து விம்மி வயிற்றிலே குருகுருப்பாய் தாகமாகி*
*பகுப்பான பிறங்காலும் கையும் வீங்கி பரிதாபம் மிகவாகி பரதேசித்து*
*தொகுப்பாக மூர்ச்சையோடு அசதியாகி சொல்லரிய மனம் வரண்டு சோகம் கொண்டு*
*விகுப்பான கையதினால் சேட்டை செய்யில் விரைவாக மரணமென்று விள்ளலாமே.* (95)

**பொருள்** : சிறுநீர், மலம் அடைத்து, வயிறு விம்மி, வயிறு குருகுருத்து, தாகம் உருவாகி, புறம் கால், புறம் கை வீங்கி, பரதாபம் அதிகம் வந்து, மயக்கம், அசதியாகி, மனம் பதறி, சோகம் உருவாகி, கையினால் சேட்டைகள் செய்தால் விரைவாக மரணம் வரும் என்று கூறலாம்.

*விள்ளுவேன் சிலேற்பனமது மூலத்துற்று மேலேகும் மேல் மூச்சாய் பிறாண வாய்வை*
*துள்ளவே சேர்ந்து நெஞ்சடைப்புமாகி தொண்டையிலே அலை திரைபோல் இரைந்து மோதி*
*மெள்ளவே கண் சிவந்து அருகேப் பார்த்து மேனியெல்லாம் சோபமுமாய் வெளுத்துக் காட்டி*
*கள்ளவே குறுவியர்வை வியர்த்துதானால் காலன் உயிர் வரவதுவும் உண்மைதானே.* (96)

**பொருள்** : கபம் மூலாதாரத்தில் இருந்து புறப்பட்டு மேல் மூச்சாகி, பிறாண வாயுவை சேர்ந்து, நெஞ்சடைத்து, தொண்டையில் கபம் அலைதிரைபோல் இரைந்து மோதி, கண் சிவந்து, பரபரத்த விழியுடன் பார்த்து, உடல் பலம் குன்றி விளறி, குறு வியர்வை காணுமானால் மரணம் உருவாகும்.

*உண்மையுடன் அடிவயிறு முதுகும் வீங்கி உறு மூல அக்கினியும் கேடதாகி*
*வண்மையுடன் அன்னமதை வெறுத்துக்காட்டி வயிறு பொருமி மேல்மூச்சாய் வாந்தியாகி*
*பெண்மயிலே தசநாடி குன்றி வாதம் பித்தமது ஒடுங்கி வளர் கபம் மேல் பொங்கி*
*திண்மையுடன் மூச்செடுத்து மரணம் வந்து சேருமென முன்னோர்கள் தெளிந்த வாறே.* (97)

**பொருள்** : அடிவயிறு, முதுகு வீக்கம் ஏற்பட்டு மூலச்சூடு அதிகமாகி, உணவை வெறுத்து, வயிறு பொருமி மேல் மூச்சோடு வாந்தியாகி, தச நாடிகளும் குன்றி, வாதம், பித்தம் ஒடுங்கி, கபம் மேல் பொங்கி, கடினப்பட்டு மூச்செடுத்தால் மரணம் வரும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர்.

*தெளிவான பித்தம் சேத்துமத்தில் சேர்ந்து வரும் பலபிணியும் திறத்தினோடு*
*வளியாக நாலாயிரத்தி நானூற்றி நாற்பத்தெட்டு வந்தணுகில் தேகமதில் வலுவியாதி*
*நெளிவாக பித்தமொடு உஷ்ணம் மிஞ்சி நிலைத்த பிணி அவுசதத்தால் தீரும் தீரும்*
*பழிபாடாம் சேத்துமமோடு வாதம் சேர்ந்தால் பலநோய்க்கும் மரணம் வந்து பற்றுந்தானே.* (98)

பொருள் : பித்த நாடி சேத்தும நாடியில் சேர்ந்து வரும் பல்வேறு பிணிகளான 4448-ம் வந்து உடலில் வலுவான வியாதி ஆகிறது. பித்த நாடியோடு உஷ்ணம் அதிகரித்து வரும் நோய்கள் மருந்தால் தீரும். சேத்தும நாடியொடு வாதம் சேர்ந்து வரும் பல வியாதிகளும் மரணத்தில் முடியும்.

*பற்றும் நோய் தீரவென்றால் தர்மம் வேண்டும்*
*பாங்கான குணம் வேண்டும் வணக்கம் வேண்டும்*
*சித்திரமாய் அவிழ்தங்கள் செய்ய வேண்டும்*
*செய்மருந்து சுத்தியுள்ள பத்தியம் வேண்டும்*
*முக்திபெறும் வைத்தியன் மேல் கிருபை வேண்டும்*
*முன்னோர்கள் நூல் முறைபோல் நடக்க வேண்டும்*
*பக்தியுடன் இப்படியே நடந்த பேர்க்கு*
*பிணி தீருமென்று மனம் பொருந்திச் சொல்லே.* (99)

**பொருள்** : மனிதர்களுக்கு ஏற்படும் நோய்கள் தீர வேண்டுமெனில் தர்ம காரியங்கள் செய்ய வேண்டும். கருணையான குணம் வேண்டும். பெரியோர்களை வணக்கம் செலுத்த வேண்டும். நல்ல அவிழ்தங்கள் செய்து உட்கொள்ள வேண்டும். உள்கொள்ளும் போது சுத்தமாகவும், பத்தியமாகவும் இருக்க வேண்டும். மருத்துவர்கள் மீது கருணை வேண்டும். முன்னோர்கள் சொன்ன நூல் முறையை கடைபிடித்து நடக்க வேண்டும். இறை பக்தியுடன் இவ்வாறு நடப்பவர்களுக்கு நோய் தீரும் என்று கூறலாம்.

*பொருந்தியதோர் சதகமெனும் நூறும் சொல்லி*
*புகழ் பெரிய நிகண்டு தொல்காப்பிய புராணம்*
*அருந்தவம் செய் காரிகை நன்னூலுக்கு*
*இந்நூலான உரிச்சொல் நேமி நாதத்தோடு*
*வருந்து பன்னூல் பாட்டியலும் எழுத்தும் சொல்லி*
*வரும் யாப்பு பெருத்த விதி அலங்காரம் சொல்லி*
*திருந்த அடியேன் உரைத்தேன் அறிவுள்ளோர்க்கு*
*சிறப்பாக கொள்வது உங்கள் சிறப்புத் தானே (100)*

பொருள் : வைத்திய சதகம் என்னும் 100 பாடல்களையும் சொல்லி, நிகண்டு, தொல்காப்பியம், யாப்பெரும் கலகாரிகை, நன்னூல் போன்ற நூல்களுக்கு இணையாக

உரிச்சொல், நேமி நாதம், பன்னூல், வெண்பாபாட்டியல், எழுத்து, சொல், யாப்பு, பொருத்த விதி, யாப்பெரும் கலம் போன்றவைகளை அடிப்படை ஆதாரங்களாக வைத்து இந்நூலை அறிவுள்ளவர்கள் தெரிந்து கொள்ளும் படியாக நான் கூறியுள்ளேன். சிறந்தவர்கள் கற்று தெரிந்து கொள்வது அவரவர்களின் சிறப்பு ஆகும்.

*சிறப்பாக ஆராய்ந்து வாதம் பித்தம் சேத்துமமும் தொந்தமுடன் தீரும் தீரா*
*இரைப்பான தத்துவத்தின் பஞ்சபூதம் உள்கிரிகை தசநாடி வாய்வு பேதம்*
*நரைப்பாக தென்பொதிகை தன்னில் வாழும் நன் முனிக்கு குருபரன் தான் நன்று சொன்னார்*
*அறப்பாக நினையாமல் உணர்ந்த பேர்க்கு அம்புவியில் ஆதியோர் வாழ்வுண்டாமே.* (101)

**பொருள்** : ஒரு நோயாளியின் உடலை நன்றாக ஆராய்ந்து, வாதம், பித்தம், சேத்துமம், தொந்தம் இவைகளை கணித்து தீரும் நோய், தீரா நோய் என்பதையும் தெரிந்து, தத்துவங்கள், பஞ்ச பூதம், உள் உடலில் ஏற்படும் கிரியைகள், தச நாடி, தச வாய்வு இவைகளின் வேற்றுமைகள் போன்றவைகளை ஆராய்ந்து தென் பொதிகை மலையில் வாழும் முனிவருக்கு முருகன் அருளின இந்நூலை தவறுதலாக நினையாமல், உணர்ந்தவர்களுக்கு இப்புவியில் நீடூழி வாழ முடியும்.

*உண்டான இந்நூலை உணர்ந்த பேர்கள் உலகுதனில் பெரியோர்கள் ஆத்மஞானி*
*கொண்டாடும் ஆக்கைமதி புத்தியுண்டாம் குருதரிசனமும் பெருகி ஞானமுண்டாம்*
*வண்டாடும் பூமாது நிறை வாழ்வுண்டாம் மகா மோட்சம் சாயுட்ச்சிய பதமே நல்கும்*
*பண்டோர்கள் நூல் முறை ஆராய்ந்து சொன்னேன் பாங்கான சதகமெனும் நூறு முற்றே.* (102)

**பொருள்** : இந்த நூலை உணர்ந்தவர்கள் இப்பூவுலகில் பெரியோர்கள், ஆத்ம ஞானிகள் ஆவர். அவர்களுக்கு தங்கள் உடல் குறித்த ஞானம் உருவாகும். குரு தரிசனம் பெற்று ஞானம் பெறுவர். அன்னையின் ஆசிர்வாதத்துடன் கூடிய வாழ்வு மோட்சம், சாயூட்ச்சிய பதம் நல்கும். முன்னோர்கள் சொன்ன நூலை ஆராய்ந்து என்னால் கூறப்பட்ட சதகம் என்னும் 100 பாடலும் முற்று பெற்றது.

முற்றும்

From http://siddhabooks.com uploaded by S. Ramesh Babu

Siddha Medical Literature Publishers

Designed and Developed by http://varmakalparemedy.com